நக்கீரர் இயற்றிய

திருமுருகாற்றுப்படை

தொகுப்பாளர் :

ஸ்ரீமதி சிவானந்தம் தம்பையா

பதிப்பாசிரியர் :

வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

வெளியீட்டகம் :

சரஸ்வதி புத்தகசாலை,

175, செட்டியார் தெரு, கொழும்பு.

மன்மத ௵ வைகாசி மீ

பதிப்புரிமை] 1955 [விலை, ரூ. 2

PRINTED AT
THE PREMIER ART PRESS
PURASAWALKAM, MADRAS—7.

Dedicated to the memory of

My Revered Father

SIR PONNAMBALAM ARUNACHALAM

Scholar and Statesman.

(1853—1924)

FOREWORD

BY HONOURABLE MR. S. NATESAN,

Minister of Posts and Broadcasting

Thirumurukarruppadai is a well known classic of the Sangam Age of Tamil Literature. Its author Nakkirar, lived about two thousand years ago. It is one of the earliest Tamil poems in praise of Muruka, the Deity who symbolizes Youth and Victory over evil forces.

The antiquity of the worship of Muruka is evident from the references to it in Tholkappiam, the most ancient Tamil work which is now extant. Thirumurukarruppadai describes the important shrines of Muruka. It contains descriptive passages of entrancing beauty and the fervid devotion which runs through the poem is like the torrential cascade described in the final portion of the poem.

The poem has a special attraction on account of the feeling of religious sublimity which it inspires. It finds a place in the daily prayers of thousands of votaries of Muruka among the Tamils in South India and Ceylon.

The diction of the poem is archaic and presents difficulties to readers unfamiliar with Sangam literature. Hence the presentation of the poem in the following pages with a word-for-word paraphrase in Tamil, is a welcome boon to readers who wish to understand fully the import of the poem. The exposition has the merit of being as precise as it is lucid.

படும்.

The usefulness of this publication has been enhanced by the addition of an illuminating article on the worship of Muruka by the late Sir Ponnambalam Arunachalam and his English translation of Thirumurukarruppadai, which makes it possible for those who do not know Tamil to understand and appreciate the poem.

Readers of this book owe a debt of gratitude to Srimathi Sivanandam Tambyah who has compiled and published it as a token of her filial devotion to the memory of her father Sir Ponnambalam Arunachalam.

COLOMBO,
8th June 1955.

S. NATESAN

முன்னுரை

முருகனை அடைந்து அவன் அருள் பெற விழைவார்க்கு ஒப்பற்ற ஒரு வழி காட்டியாய் விளங்குவது 'திருமுருகாற்றுப்படை' என்னும் சீரிய செந்தமிழ் நூல். இந்நூல் கடைச்சங்க இலக்கியங்கள் எனக் கருதப்படும் நூல்களுள் **பத்துப்பாட்டு** என்னும் தொகுதியில் முதற் பாட்டாய் அமைந்துள்ளது; **நக்கீரர்** என்னும் புலவர் பெருமானால் அன்பு கனிந்து பாடப்பட்டது; சைவத் திருநூல்களாய்த் திகழும் **பன்னிரு திருமுறைத்தொகுதி**யுள் ஒன்றான **பதினோராந்திருமுறையில்** ஒன்றாயும் அமைந்தது.

'ஆற்றுப்படை' என்பது 'வழிப்படுத்துதல்' அல்லது 'வழி விடுதல்' என்னும் பொருளது. அதாவது, பரிசில் பெற்றான் ஒருவன், அது பெறக் கருதுவான் ஒருவனைப் பரிசில் வழங்குந் தலைவனுடைய சிறப்பியல்புகளை விளக்கிக் கூறி அவனிடம் செலுத்துவதாகப் பாடப்படும் ஒரு பிரபந்த வகை. இது **தொல்காப்பியம், புறத்திணை இயல்,** 36-ஆம் சூத்திரமாகிய 'தாவில் நல்லிசை' எனத்தொடங்கும் சூத்திரத்தில்,

> **'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
> **ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
> **பெற்ற பெருநலம் பெறுஅர்க் கறிவுறீஇச்**
> **சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்'**

என்னும் பகுதியால் விளங்கும். எனவே, 'கூத்தராற்றுப் படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலி யாற்றுப்படை' என இவ்வாற்றுப்படை பல வகைப்படும்.

'திருமுருகாற்றுப்படை' என்பதற்கு 'முருகனை அடைந்து வீடு பெறுதற்கு விழைந்த ஓர் அன்பனை வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்து அவன் சிறப்பினை விளக்கிச் செல்ல விடுத்தது,' எனப் பொருள் கொள்ளப் படும். இதனை இந்நூலின்,

'அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே'

என்னும் அடிகள் (59-66) விளக்கும்.

முருகக் கடவுள் தமிழ் நாட்டின் பல பகுதிகளிற் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார் என்பது அனை வரும் அறிந்ததே. அவ்விடங்களுள் முதலாவதென இப் பாட்டில் குறிக்கப்படும் திருப்பரங்குன்றம், மதுரைக்குத் தென்மேற்கில் 5 கல் தொலைவில் உள்ளது. 'அலைவாய்' என்பது தென்கடற்கரையில் திருநெல்வேலிக்கு 36 கல் தொலைவில் உள்ள 'திருச்செந்தூர்' என்னும் திருப்பதி யைக் குறிக்கும். 'ஆவினன்குடி' என்னும் 'பழனி மலை' திண்டுக்கல்லுக்கு 36 கல் தொலைவில் உள்ளது. 'திருவே ரகம்' என்னும் 'சுவாமி மலை' கும்பகோணத்திற்கு 4 கல் தொலைவில் உள்ளது. 'பழமுதிர் சோலை' என்பது கனி மரங்கள் அடர்ந்துள்ள காடு மயமான திருப்பதிகளைக் குறிக்கும் என்பர் அறிஞர். இலங்கையில் உள்ள

'**கதிர்காமம்**' என்னும் முருக நிலையத்தை அவற்றுள் ஒன்றெனக் கருதலாம்.

இந்நூல் பல நூற்றாண்டுகளாக முருகோபாசனை செய்வார்க்கு ஓதலான நூலாய் விளங்கி வருகின்றது. இதனை அனைவரும் பொருளுடன் ஓதி உணர்தல் நல மெனக் கருதித் தெளிவான பதவுரையுடனும் பொருளக ராதி அருஞ்சொல் அகராதிகளுடனும் வெளியிடலாயிற்று. அன்பர் ஓதிப் பயன் பெறுவாராக.

இவ்வெளியீட்டை அணிபெறச் செய்தற்கு ஓர் அணிந்துரையும், 'திருமுருகாற்றுப்படை வரலாறு, திருமுருகாற்றுப்படைச் சிறப்பு' என்னும் அரிய கட்டுரை களும் உதவிய அறிஞர் பெருமக்களுக்கு எனது அன் புடன் கலந்த நன்றி உரியதாகுக.

கச்சியம்பதி,
7—4—'55

மே. வீ. வே. பிள்ளை

அணிந்துரை

என்றும் அகலாத இளமை எழில் நலத்துடன் விளங்கும் பரம்பொருள் முருகக்கடவுள் வடிவம் சிவமூர்த்தியினுடைய பழைய வடிவாகிய ஆறுமுக வடிவம் ஆகும். தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான். இதனுல் சிவம் வேறு முருகன் வேறு என்று கருதுங் கருத்துப் பிழையென்பது உறுதியாகின்றது. சிவமூர்த்திக்கு அந்நியமாக முருகனை நினைத்து மதியீனத்தாலே சூரபன்மன் கெட்டான்.

சிவபெருமான் தட்சிணமூர்த்தியாகவும், நடராஜ மூர்த்தியாகவும் காட்சி தருவது போலச் சிறப்பாக அருள் புரியும்பொருட்டு முருக மூர்த்தமாகக் காட்சி தருவார்.

ஐம்முகச்சிவமும் ஆறுமுகச்சிவமும் ஒன்றே என உணர்க.

கலியுகவரதராய்க் கண் கண்ட தெய்வமாய் அடியவர்க்கெளியவராய் விளங்கும் குமார மூர்த்தியை மன மொழி மெய்களால் வழிபடுவோர் இகபர நலன்களை எளிதிற்பெறுவர்.

விண்ணளவாய்க்குவிந்த விறகை வெந்தழற்பொறி எரித்துச் சாம்பராக்குவது போலப் பல பிறப்புக்களில் புரிந்து குவித்துள்ள மலை போன்ற வல்வினைகளை முருகவேளுடைய ஆறுமுகங்களில் ஒரு முகம் அழித்து அருள் புரியும். “கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே”; “உருகும் அடியார் இருவினைத் தொகையறுக்குமவன்.” மணத்தை நாசியினுலும், ஓசையைச் செவியினுலும், உருவத்தைக் கண்களாலும், சுவையை நாவினுலும்,

காற்றை உடம்பாலும் அறிவது போல, முருகப் பெரு மானைத் திருவருள் ஒன்றாலேயே அறிய முடியும். "அவ னருளாலே அவன்றாள் வணங்கி" என்ற தமிழ் மறை யால் இதை உணர்க.

ஆகவே, குமரக் கடவுள் திருவருளை அன்பினாலேயே அடைய முடியும். "அன்பால் அருள் வரும்"; "அருள் என்னும் அன்பீன் குழவி" என்பது பொதுமறை.

அன்பை விளைவிப்பன ஆன்றோருடைய அமுதப் பாடல்கள். தேவாரம், திருவாசகம், திருமுருகாற்றுப் படை, திருப்புகழ், கந்தரனுபூதி முதலிய பாடல்களை நாம் படிக்கும் போதும், கேட்கும் போதும் அன்பு மேலிடு கின்றது. அந்த அன்பால் அருளையும், அருளால் இறை வனையும் அடையலாம். அப்பாடல்களையும் திருக்கார்த் திகை, கந்தர் சஷ்டி முதலிய நாள்களில் விரதம் இருந்து பாராயணம் புரியின் பன்மடங்கு பயன் உண்டாகும். ஞாலத்தினும் மாணப்பெரிது காலத்தின் செய்த கருமம்.

ஆகவே, அடியவர்கள் அனைவர்கட்கும் அருளாரமுத நல்விருந்தாக இந்த நூல் வெளி வருகின்றது. இதனை அச்சிட்டு உபகரிக்கின்றவர்களது புண்ணியம் சாலவும் பெரிது. இது ஞான தானமாகும். இதனைத் தினம் பாரா யணம் புரிந்து அந்தக் கந்தவேளை எந்த வேளையும் மற வாது போற்றி இருமை நலங்களையும் ஒருமையுடன் பெற்றுப் பெருமையடைவார்களாக.

அன்பன்,

கிருபானந்தவாரி.

ஓம்

திருமுருகாற்றுப்படை வரலாறு

[சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர், தக்ஷிணகைலே]

திருமுருகாற்றுப்படை மதுரைத் தமிழ்ச் சங்கப்புலவரான நக்கீரனூர் பாடியது; சங்ககாலத்துப் பாடல்களிலே 'பத்துப்பாட்டு' என்னும் பகுதியில் முதலாவதாக அமைந்தது. ஆற்றுப்படை என்பது, 'ஆறுபடுத்து, வழி காட்டு' என்ற கருத்தைத் தரும். வள்ளல் ஒருவரிடத்திலிருந்து பரிசில் பெற்றுச் செல்லும் பாடகரோ, பாவலரோ, அன்றி அவரையொத்தார் ஒருவரோ, மற்றையோரையும் அப்பரிசில் பெறுவிப்பான் வேண்டி அவர்க்கு அவ்வள்ளல் தம் பெருமைகளைக் கூறி அவரிடம் செல்ல வழி காட்டும் முறையில் அமையும் பாடல் ஆற்றுப்படை எனப்படும். இங்குத் தன் இஷ்ட தெய்வமான திருமுருகனிடத்தே வீட்டின்பம் பெற்றுெருவன் அவ்வீடு பெறுவான் விரும்பும் பிறனெருவனை ஆற்றுப்படுத்தியதாக நக்கீரனூர் பாடுகிறுர்.

இந்தப்பாட்டு முருகப்பிரானுடைய தலங்களனைத்துள்ளும் மிகவும் சிறப்பு வாய்ந்த திருப்பரங்குன்றம்—திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர் சோலை என்பனவாய ஆறு படைவீடுகளின் பெருமைகளையும், அவைகளில் முருகன் அரசு வீற்றிருந்து அன்பர்க்குச் செய்யும் கருணையையும் புகழ்ந்து கூறும்.

தெய்வ அபசாரத்தினுலும் யோகசாதனையிலிருந்து வழுவியதனுலும் நக்கீரர் ஒரு பூதத்தினுலே சிறை செய்

யப்பட்டு ஒரு மலைக்குகையில் அடைக்கப்பட்டார். அதில் முன்னமே தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேர் அடைக்கப்பட்டிருந்தனர். நக்கீரரோடு சரியாக ஆயிரவர்களான பின்னர், அவர்களனைவரையும் உண்ணும்பொருட்டு நீராடச் சென்றது பூதம். நக்கீரர் பிடிபட்டமையினாலேயே தம் முடிவு நெருங்கியதென மற்றையோர் அவரை இகழ்ந்து மனம் வருந்தி அப்பூதத்திடமிருந்து தங்களை விடுவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அது காலை நக்கீரர் முருகக்கடவுளைக் குறித்துத் திருமுருகாற்றுப்படையைப் பாடி அவரருளாலே அனைவரையும் சிறை நீக்கினர். சீகாளத்திப்புராணத்திலே நக்கீரச்சருக்கத்தில் இதன் விரிவு காணப்படும். திருமுருகாற்றுப்படையின் சாரம் பின் வருமாறு :

"உலகம் உவப்பத்தோன்றும் இளங்கதிரோனது ஒளியையும், வலிமை பெற்ற தாளினையும், பெருமை பெற்ற கையினையும் உடையவனும், தெய்வயானையம்மையாரது கணவனும், கடம்பமலர் மாலையணிந்த மார்பனும், சோலை சூழ்ந்த மலையிடத்துதித்த காந்தட்பூக்களையணிந்த திருமுடியனும், சூரனைத் தடிந்த வேலனும் ஆகிய முருகப்பிரானது சேவடியை அணுகக்கூடிய நல்வினை புரிந்தமையாலே ஏற்பட்ட இச்சையோடு அவன்பாற்செல்லும் வகையை நீ விரும்பிவிட்டாயாயின் இப்போதே தப்பாது நீ பெறற்கரிய பேரின்ப வீட்டைப் பெறுதற்கையமில்லை. அத்தகைய பெருவாழ்வை அவனிடம் பெற, 'அவன் எங்குறைகின்றான் ?' என்று நீ கேட்கின்றாயோ ? சொல்கின்றேன்; கேள் : மாட்சிகள் பல பெற்ற மதுரையம்பதியின் மேற்கிலே இயற்கை வளங்களாலே நிரம்பப்பெற்ற திருப்பரங்குன்றினிலுறைகின்றான் ; அன்றியும், கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் மயில் வாகன

மும் உடையனுய்ச் சீர் அலைவாயெனும் திருச்செந்தூரி லும் எழுந்தருளியுள்ளான்; அதுவுமன்றி, அயன், அரி, அரன் மூவரும் தேவரும் தத்தம் தொழிலைத் திறம் பட நடத்த வல்லமை தந்து அருள் புரியும்படி பிரார்த் திக்க வேண்டி வந்து காணுகின்ற திருவாவினன் குடியிலும், அந்தணர் போற்றும் திறமறிந்து மகிழ்ந்து வாழும் திருவேரகப்பதியிலும் இருந்தருள்கின்முன்; அஃதன்றியும், குரவைக்கூத்தாடி மகிழும் மலை மகளி ரோடு உடனுடிக் குன்றுதோறுமிருந்தருளுகின்முன்; அன்றியும், விழாக்கள் நடைபெறுமிடங்களிலும், அன் புடையார் மனங்களிலும், காடு சோலை ஆறு குளம் சந்தி சதுக்கம் மரவடி அம்பலம் ஆகிய எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துளன். ஏதோ யான் அறிந்த அளவு கூறி னேன். நீ அவ்விடங்களிலோ, பிறவிடங்களிலோ கண்டு விரும்பித்துதித்துக் கைதொழுது அவன் திருவடி உன் தலை யுறப்பணிந்து, 'சரவணபவனே! அறுவர் பெற்ற செல்வ! கடவுட்புதல்வ! பார்வதி குமரா! தேவசேனுபதியே! தெய்வயானை மகிபனே! பெரும்பெயர் முருகா! நலிந் தோர் கதியே! இரந்தோர்க்கீயும் வள்ளலே!' என யான் அறிந்து நினக்குக்கூறிய அளவில் நில்லாது நீயும் பலவாறு கக்கூறித் துதித்து, 'நின்திருவடி நாடிவந்தேன். பேரின்ப வீடருள்வாய்,' என விண்ணப்பம் செய். உனது விண் ணப்பம் செய்து முடியும் முன்னமே இயற்கைக்காட்சி கள் பலவும் செறிந்த மலைகளுக்கு உரியவனுன முருகன் தன் திருவுருக்காட்டி, 'நின் வரவையும் நோக்கத்தையும் நான் முன்னமே அறிவேன். அஞ்சேல்!' என்று அருளி அறிவுச்செல்வங்களை வழங்கி, வீடு பேற்றினையும் அருள்வான்."

முருகக்கடவுளுடைய திருவருள் பெற விரும்பும் அன்பர்கள் இத்திருமுருகாற்றுப்படையை நாளும் மன வொருமையோடு பாராயணம் பண்ணுவார்களேயாகில் எண்ணிய எண்ணியாங்கெய்துவார்கள்.

இதனைப்பல்லோர்க்கும் பயன்படுமாறு அச்சிட்டு உதவிய சீர் சான்ற அம்மை சிவானந்தம் தம்பையா அவர்கட்கு இறைவன் திருவருளும் நல்லோர் ஆசியும் என்றும் குன்றுதிருந்து நலம் பலவும் விளையுமாக!

சிவானந்த தபோவனம்,
தக்ஷிணகைலை,
திருக்கோணமலை

சுவாமி சச்சிதானந்த
யோகீஸ்வரர்

திருமுருகாற்றுப்படைச் சிறப்பு

[பண்டிதர், ச. இராமசந்திரன், பரமேஸ்வரக் கல்லூரி]

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்," என்னும் திருமூல நாயனர் உரைப்பொருளை அவர் காலத்துக்கு முன்பே தமிழர்கள் கடைப்பிடித்து ஒழுகினர்கள் என்பதற்குச் சங்க நூல்களில் விளங்கும் ஆற்றுப்படைச் செய்யுள்களே தக்க சான்ருகும். ஆற்றுப்படைச் செய்யுளை முற்றிலும் புதிய முறையில் மாற்றி அமைத்து அதற்கு நித்திய வாழ்வளித்த பெருமை திருமுருகாற்றுப்படை என்னும் நூலின் ஆசிரியரான நக்கீரர் என்னும் புலவர் பெருமானைச் சாரும். முருகன்பால் முத்தி இன்பம் பெற்ற ஆசிரியர், யாமும் அப்பெருமானை அடைந்து அவ்வின்பத்தினைப் பெற்றுய்ய வேண்டும் என்னும் கருத்தை எமக்குக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது.

இவ்வரும்பெருநூல், திருப்பரங்குன்றம் முதல் பழமுதிர்சோலை வரை உள்ள முருகப்பெருமானது ஆறு படை வீடுகளிலும் அப்பெருமான் உறைந்து அடியார்க்கருளும் இயல்பையும் அவனை வழிபடும் முறையையும் விளக்கும். (1) திருப்பரங்குன்றத்தைப்பற்றிய பாடற் பகுதியில் முருக தரிசனம், முருகன் திருவுருவ வருணனை என்பனவும், (2) திருச்சீரலைவாய் பற்றிய பகுதியில் அறுமுகப்பெருமானது அருட்செயல்களும், (3) திருவாவினன்குடியில் அவன் அடியார்க்கருளுதலும், (4) திருவேரகத்தில் முருகன் அந்தணர் பூசனையை ஏற்றுக்கொள்ளுதலும், (5) குன்றுதோருடலில் முருகப்பிரான் தன்னையே குலதெய்வமாகக் கருதி வழிபடும் குறவரது குர

வைக்கூத்தை ஏற்றருளலும், (6) பழமுதிர் சோலை பற்றிய பாடற்பகுதியில் வேடர் முதலிய பல்வேறு வகையினராகிய அடியார் தாந்தாம் அறிந்தவாறே செய்யும் வழிபாட்டினை முருகன் ஏற்றலும், எவ்விடத்தும் யாவர்க்கும் ஒப்ப அருளும் அப்பெருமானது தெய்விகக் கருணையும், அவனை வழிபடும் முறையும், அவ்வழிபாட்டின் பயனும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கும். இனி இதுவரை கூறியவற்றைச் சற்று விரிவாகக் கவனிப்போம்:

I. திருப்பரங்குன்றம் :

(1) முருகதரிசனம்

இந்நூலின் ஆரம்பத்திலே ஆசிரியர் தாம் பெற்ற முருகதரிசனத்தின் அனுபவத்தை, அவ்வனுபவத்தாற் றோன்றிய பேரானந்த அருவியிலே மலர்ந்து மெய்யொளி வீசித் தெய்வ மணங்கமழும் திருப்பாடலின் வாயிலாக எம்முளத்தும் உய்க்கின்றார், அதனைக் காண்போம் :

> "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
> கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"

இதன் பொருள் : மேருவை வலம் வரும், எல்லோரும் புகழும் சூரியன் உலகம் மகிழக் கடலிற்றோன்றினாற்போல, ஒழியாது எவ்விடத்தும் விளங்கும் ஒளி.

முருக பத்தியிலே முற்றும் அழுந்தித் தம்மை மறந்திருந்த இப்புலவர் பெருமானுக்குத் திடீரென ஒரு தெய்விகப் பேரொளிப்பிழம்பு—முருக தரிசனம்—தோன்றுகின்றது. அது தெய்வ ஒளி ஆகையினாலே, பேரானந்தத்தையும் பேரறிவையும் உடன்கொண்டு விளங்குவதனால், அதனிலே ஈடுபட்ட புலவர், "உவப்பு" என்றும்,

"அவிர் ஒளி" என்றும் அதன் இயல்பை விளக்குகின்றார். அகிலாண்ட கோடிகட்கும் உண்மையில் ஒளியாவது அவ்வொளியே என்னும் இறைவனது வியாபகத்தன்மையை உணர்ந்த ஆசிரியர், "உலகம்" என எடுத்து, இப்பூவுலகு முற்றும் ஒளிபெறச் செய்யும் சூரியனை அவ்வொளிக்கு உவமை கூறுவாராயினர். காலம், இடம் என்னும் வரம்புகளைக் கடந்து என்றும் எங்கும் ஒரே தன்மைத்தாய் விளங்குவது கடவுட்பேரொளி என்பது தோன்ற, "ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி" என்கிறார் புலவர். எனவே, இம்மூன்று அடிகளாலும், உயிர்களின் அஞ்ஞான இருளைத்தொலைக்கும் இறைவனதியல்பும், நீலக்கடலிலுதிக்கும் இளஞ்செஞ்சூரியன்போல நீலமயில்மேல் இவர்ந்து காட்சி அளிக்கும் முருகப்பிரானது தோற்றமும் நன்கு விளங்கும்.

(2) முருகன் திருவுருவ வருணனை

இவ்வாறு முருகனது சொரூபத்தை ஒளி வடிவிற் கண்டு அவ்வொளியே கண்ணுகக்கொண்டு நோக்கிய போது அதனுள்ளே எம்பெருமானது திருவுருவம் விளங்கக்கண்ட ஆசிரியர், ஆனந்த பரவசராய், அவ்வுருவைப் பாதாதி கேசமாகப் பார்த்து, அதன் அழகை அனுபவித்த பெருமித உணர்ச்சியுடன் கூடிய பொருட்செறிவுள்ள பாடற்பகுதி மேலதனைத் தொடர்கின்றது. இதனுள் பெருமானது சேவடி, திருக்கை, மார்பு, சிரசு என்பன முறையே வருணிக்கப்படுகின்றன.

அடைக்கலம் புகுந்த அடியார்களை அலைய விடாது ஆதரித்துக்காக்கும் அருள் வலிமையைத் தமக்கு இயல்பாக உடைய ஐயனது திருவடிகளைக் கண்ட ஆசிரியர், அவை எமக்கும் ஆதாரமாகும் என்னும் உறுதியான நம்

பிக்கையை ஊட்டக் கருதி, "உறுநர்த்தாங்கிய மதனுடை நோன்றாள்," என அவற்றை வருணிக்கிறார். "தாங்கும்" என்னாது "தாங்கிய" என்றே கூறுவதனால் அடைக்கலம் புகுந்தாரைத் தாங்கிய தன்மையைப் புலவர் அக்காட்சியால் நேரிற்கண்டனர் என்பது விளங்கும்.

இங்ஙனமே திருக்கையை வருணிக்கையில் "செல்லுறழ் தடக்கை" எனக் கூறியதற்கும் பொருள் கொள்ளலாம். இறைவனது அருட்கிரியைக்குரிய திருக்கரத்தின் தொழில் தீயன கடிதல் என்பதும், "தடக்கை" என்பதனால் எவ்வளவு தீமைகள் சேரினும் அவை இறைவனது நல்லியல்புடன் ஒப்பிடப்படுங்கால் அணுவளவுதானும் ஆகமாட்டா என்பதும், இத்தகைய வரம்பிகந்த நல்லியல்பினால் எத்தகைய தீமைகளையும் தொலைத்தருள்பவன் இறைவன் என்பதும் இவ்வடியிற் குறிப்பாக உணர்த்தப்பட்டன.

இவ்வாறு நல்லன ஆக்கல், அல்லன நீக்கல் என்பவற்றால் விளைவது ஆனந்தமே ஆதலால், அவ்வானந்தத்தை ஆக்கும் அழகு நிறைந்த குளிர்ந்த கடப்பமாலையணிந்த திருமார்பைப்பற்றிக் கூறக்கருதியே, "பராஅரை மராஅத் துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்," என்றார் போலும்!

இத்தகைய பேரானந்தத்தை அருள்பவன் முருகனே என உணர்த்தல் வேண்டி, அவனுக்குரிய அடையாளப் பூவாகிய செங்காந்தள் அணிந்த சிரத்தினை வருணித்து, தெய்விக வெற்றிக்குரிய செவ்வேட்சேயின் திருவருள் பெறுவோர் பெருமையையுங் குறிப்பாலுணர்த்துவான் வேண்டி, "சுடர்ப்பூங்காந்தட் பெருந்தண்மாலை மிலைந்த சென்னியன்" எனக்கூறி எடுத்துக்கொண்ட வருணனையை நிறைவு செய்கின்றார் ஆசிரியர்.

II. திருச்சீரலைவாய் :

அறுமுகவன் அருட்செயல்கள்

தமக்கு முன் காட்சி அருளிய "ஒருதிரு முருகனே" பல்வேறு வகைப்பட்ட அருட்செயல்களைப் புரிவதற்காகக் "கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு" விளங்குதலை அவனருள் உணர்த்த உணர்ந்த புலவர் பெருமானும் நக்கீரர், அடியார்க்கெல்லாம் இவ்வுண்மையைக் காட்டியருளும் முருகப்பிரானது கருணைத்திறன் நினைந்துருகி, "தாவில் கொள்கைத் தந் தொழின் முடிமார், மனனேர் பெழுதரு வாணிறமுகனே" என அவனுடைய ஆறு திருமுகங்களின் தொழில்களைக் கூறத் தொடங்கி, அவற்றை முறையே கூறி முடித்துப் பின்னர் அப்பெருமானது பன்னிரு திருக்கரங்களின் தொழில்களையுங் கூறுவாராயினர்.

அவ்வாறு கூறுங்காலும் தமக்கு முன்னே காட்சி கொடுத்த ஒளி வடிவின் வயப்பட்டவராகையினுலே அவ் வடிவிற்குரிய திருமுகத்தினையே முதல் எடுத்து, "மாயிரு ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன் றொரு முகம்" எனக் கூறுகின்றார் புலவர். விளக்கல், அன்பர்க்கு வரம் அருளல், அந்தணர் பூசனை ஏற்றல், காத்தல், தீயோரைச் செறுதல், இன்புறு(த்)தல் என்னும் அருட் செயல்கள் ஆறும் முருகனது ஆறு திருமுகங்களுக்கும் உரியனவாகக் கூறப்படுகின்றன.

இவற்றுள் விளக்கல் திருப்பரங்குன்றம் என்னும் முதற்பகுதியிலும், அன்பர்க்கருளல் திருவாவினன்குடி என்னும் இரண்டாம் பகுதியிலும், அந்தணர் பூசனை ஏற்றல் திருவேரகம் என்னும் மூன்றும் பகுதியிலும் வெளிப்படையாகத் தனித்தனியே விளக்கப் பெற்றும்,

ஏனைய மூன்றும் ஆங்காங்கே குறிப்பாகக் கூறப்பெற்றும் இருத்தலால், இவ்விரண்டாம் பகுதியாகிய திருச்சீரலை வாய் (செந்தில்) என்னும் பகுதி இந்நூலின் ஆறு பகுதி களையும் ஒருங்கு தொடர்புறுத்தி நிற்பது புலனாகும். இதனாலும், இங்கு முருகன் முடிமன்னர்க்குரிய சிறப்புக்க ளோடு வருணிக்கப்படுவதனாலும், விரைந்து பொலிந்து செல்லும் இப்பாடற்பகுதியின் நடையாலும் அலைவாய் என்னும் செந்திலம்பதி முருகன் அரசு வீற்றிருக்கும் அத் தாணி மண்டபம் ஆகிவிடுகிறது.

மேலும், இப்பகுதியில் முருகனது பன்னிரு திருக் கரங்களின் தொழில்களுங் கூறப்பட்டன. அவை ஆறு திருமுகங்களின் தொழில்கட்கேற்பக் கூறப்பட்டன என இந்நூற்குரை செய்த நச்சினார்க்கினியர் கூறினர். அவற் றின் விரிவை அவருரை நோக்கி அறியலாம். ஈண்டு விரிப்பிற்பெருகும்.

III. திருவாவினன்குடி :

அடியார்க்கருளல்

அகத்தும் புறத்தும் பற்றறத்துறந்து முற்றறிவு பெற்ற முனிவர்களும், மும்மூர்த்திகள், தேவர், கந்தருவர் முதலியோரும் தங்குறை முடிக்கக் கருதி வந்து காணும் படி முருகப்பிரான் தெய்வயானை அம்மையாரோடு திரு வாவினன்குடியிலுறைதல் இங்குக் கூறப்படும்.

IV. திருவேரகம் :

அந்தணர்க்கருளல்

முப்புரி நூல் தரிக்கும் இரு பிறப்பாளராகிய அறு தொழிலின் வழுவாது நாற்பத்தெட்டியாண்டுப் பிரம சரியங்காத்து முத்தீப்பேணும் அந்தணர் பூசனையை

உவந்து முருகன் திருவேரகத்துறைதல் இங்குக் கூறப் படும்.

V, குன்றுதோருடல் என்னும் பகுதியில் வேட்டுவர் அயரும் குன்றக் குரவை என்னும் கூத்தை முருகன் ஏற்றருளல் கூறப்படும்.

VI. பழமுதிர்சோலை :

இங்குப் பல்வேறு வகையினராய அடியார்கள் வெவ் வேறிடங்களில் தாந்தாம் அறிந்தவாறே ஆற்றும் வழிபாட் டினை முருகப்பெருமான் ஏற்றருளல் விளக்கப்பெறும். "வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட, ஆண் டாண்டுறைதலும் அறிந்த வாறே" என்னும் அடிகள் இதனை விளக்கும். இந்நூலின் ஆரம்பத்தில் "சேண் விளங்கவிரொளி" என இறைவனது வியாபகத் தன் மையை விளக்கி நூலைத் தொடங்கிய ஆசிரியர், இங்கும் அத்தன்மையினை விளக்கி நூலை முற்றுவிப்பதனுல், இதன் இறுதியிற்கூறப்பட்ட பொருள் முதலிற்கூறப்பட்ட பொருளுடன் சென்றியைதலும், இது வரை தனித் தனியே கூறப்பட்ட முருகனின் அருட்செயல்களைத் தொகுத்துணர்த்துதலால் இந்நூலின் ஆறு பகுதிகளின தும் சாரமாய் இதன் இறுதிப்பாகம் விளங்குதலும் புலனுகும்.

இங்குக் கூறப்படும் முருகவழிபாட்டின் முறை, அறிந்து பின் பற்றற்குரியது. முருகனை முகமலர்ந்தேத்திக் கைதொழுது திருவடியில் வீழ்ந்து வணங்கித் தோத்திரஞ் செய்தல் வேண்டும் என்கிருர் ஆசிரியர். அவ்வாறு தோத் திரஞ் செய்வதற்காக இங்கு முருகப்பெருமானுடைய இருபத்தேழு திருநாமங்கள் கூறப்படுகின்றன. இவைகள் அவனது பரந்து விரிந்த இயல்பினை விளக்குவனவாயும்,

கருங்கல் மனத்தையும் கரைத்துருக்கும் நீர்மையினவும் அமைந்துள்ளன. "நின்னளந்தறிதல் மன்னுயிர்க் கருமையின் நின்னடியுள்ளி வந்தனென்," என்னும் அடிகள், அவனருளாலே அவனை அடைதல் தவிர, எம் மனோர் முயற்சியினால் அவன் அடையக் கூடியவனல்லன் என்பது புலனாகின்றது.

இவ்வழிபாட்டின் பயன் :

(1) " நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே."

என்றும்

(2) " ....உலகத், தொருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்கும்."

என்றும் கூறப்படுவதனால், இஷ்டசித்திகளும் வீடு பேறும் ஒருங்கே அடைதலே முருக வழிபாட்டின் பயனாகும்.

திருமுருகாற்றுப்படை செந்தமிழிற்குச் சிறந்ததோர் இலக்கியமாவதோடு அடியார்களுக்கான பாராயண நூலாகவும் அமைந்திருத்தல் மகிழ்ச்சிக்குரியதாகும். யாவரும் இதனைக் கற்று, நக்கீரர் காட்டிய நன்னெறியின்கட் சென்று, முருகப் பெருமானை அடைந்து, வீட்டின்பப் பெற்றுய்வார்களாக ! சுபம் !

கட்டளைக் கலித்துறை

'ஒருமுரு கா!என்றன் உள்ளங்
குளிர உவந்துடனே
வருமுரு கா!'என்று வாய்வெரு
வாநிற்பக் 'கையிங்ஙனே
தருமுரு கா!'என்று தான்புலம்
பாநிற்பத் தையல்முன்னே
திருமுரு காற்றுப் படையுட
னேவரும் சேவகனே.[1]

---

1. முருகனிடத்தே அன்பு பூண்டு ஒழுகிய ஒரு நங்கையை அவள் கணவன், முருகனைத்துதித்தலை விட்டொழிக்குமாறு கடிந்து கூறினன். அவள் அதற்கு உடன்படவில்லை. அதனால், அவன் அவள் கரத்தை வெட்டி வீழ்த்தினன் அவள் வாய் வெருவி முருகனை அழைப்ப, முருகன் எழுந்தருளிக் காட்சி தந்து, வெட்டுண்ட கையை வளரச் செய்தனன் என்பர். இத்திருவிளையாடல் திருப்பரங்குன்றத்தில் நிகழ்ந்ததென்பர்.

திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்பவர்களால் தொன்று தொட்டு முதலில் ஓதப்பட்டு வருவதால் இக்கவி தொடக்கத்தில் ஓதத் தகுவது.

திருமுருகாற்றுப்படை

[1. திருப்பரங்குன்றம்]

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பல்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதற் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்,—

சூரர மகளிர் :

மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி,
கணைக்கால் வாங்கிய நுசுப்பின், பணைத்தோள்,
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்,
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்,
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்,
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழை,
சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனி,
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்

தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்டளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
‘கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரி’தென்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்,—
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்

பேய் மகள் :

உலறிய கதுப்பின் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
லை அலைக்கும் காதின் பிணர்மோட்டு

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்,
குருதி ஆடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்தொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க,
இருபே ருருவின் ஒருபே ரியாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்,—
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே :

திருப்பரங்குன்று :

செருப்புகன்று எடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகின் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முட்டாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன் ; அதாஅன்று,

[2. திருச்சீரலைவாய்]

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனனேர்பு எழுதரு வாள்நிற முகனே

ஆறு முகங்கள் :

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ; ஒருமுகம்,
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே ; ஒருமுகம்,
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே ; ஒருமுகம்,
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே ; ஒருமுகம்,
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே.
ஆங்குஅம் மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்

செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்

பன்னிரு கைகள் :

விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை ; உக்கம் சேர்த்தியது ஒருகை ;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயதொருகை;
அங்குசங் கடாவ ஒருகை, இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலந் திரிப்ப,
ஒருகை மார்பொடு விளங்க,
ஒருகை தாரொடு பொலிய, ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப, ஒருகை
பாடின் படுமணி இரட்ட, ஒருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட,
ஆங்குஅப் பன்னிரு கையும் பாற்பட இயற்றி,
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந் திசைப்ப, வால்வளை நரல,
உரம்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ,
விசும்புஆ றுக விரைசெலல் முன்னி,
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே ; அதான்று,

[3. திருவாவினன்குடி]

முனிவர் :

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்

பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புக,

கந்தருவர் :

புகைமுகந் தன்ன மாசில் தூவுடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம்பு உளர,

கந்தருவ மகளிர் :

நோயின்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர் இன்னகைப்
பருமம் தாங்கிய பணிந்தேந்து அல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்க,

திருமால் :

கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்று
அழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும், வெள்ளேறு

உருத்திரன் :

வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்,

இந்திரன் :

நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்,
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வர,

முப்பத்து மூவர் :

பகலிற் றோன்றும் இகலில் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கின்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன் ; அதான்று,

[4. திருவேரகம்]

அந்தணர் :

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி

அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல,
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ,
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன் ; அதான்று,,

[5. குன்றுதோறாடல்]

வேலன் :

பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்

குறமகளிர் :

கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரலுளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வாலிணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை

திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொழுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலும் நின்றதன் பண்பே; அதான்று,

[6. பழமுதிர் சோலை]

முருகன் உறையும் இடங்கள்:

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்,
ஆர்வலர் ஏத்த மேவரும் நிலையினும்,
வேலன் தைஇய வெறியயர் களனும்,
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்,
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்,
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்,
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

முருகாற்றுப்படுத்தல்:

மாண்டலைக் கொடியொடு மண்ணணி அமைவர
நெய்யொடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்

குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியொடு இன்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த வாறே :
ஆண்டாண்டு ஆயினும் ஆக ; காண்தக
முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி,
' நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ !
ஆல்கெழு கடவுட் புதல்வ ! மால்வரை
மலைமகள் மகனே ! மாற்றோர் கூற்றே !

வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பின் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள!
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்!
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில்!' எனப்பல
யானறி அளவையின் ஏத்தி ஆனாது,
'நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனென்; நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்!'எனக்
குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்
வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி,
'அளியன் றானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும!நின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்

வான்தோய் நிவப்பின் தான்வந் தெய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி,
'அஞ்சல் ஓம்புமதி ; அறிவல்நின் வரவ்'என
அன்புடன் நன்மொழி அளைஇ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்கும்;அதி பலவுடன்

அருவி :

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரற்
பூவுடை இலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கமழ் அலரிறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேணின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

திருமுருகாற்றுப்படை

[1. திருப்பரங்குன்றம்]

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி

திருமுருகாற்றுப்படை - திருமுருகனிடத்திலே செல்ல வழிப்படுத்துதல். அஃதாவது, முருகக்கடவுளை அடைய விரும்பிய ஒருவனை, முன்னரே அப்பெருமானை அடைந்து அவனது திருவருள் பெற்ற ஒருவன், அவனிருப்பிடத்திற்கு வழி கூறி அனுப்புவது. இங்ஙனம் பாவித்துப் பாடுவது, ‘ஆற்றுப்படை’ என்னும் பிரபந்தத்திற்கு உரிய இலக்கணம்.

‘திருப்பரங்குன்றம்’ என்னும் திருப்பதி, மதுரைக்குத் தென்மேற்கில் ஐந்து கல் தொலைவிலுள்ள ஒரு மலை.

1. உலகம் உவப்ப - உலகில் உள்ள எல்லா உயிர்களும் மகிழ, ஏர்பு வலன் திரிதரு - எழுந்து (மகாமேரு மலையை) வலமாகச் சுற்றி வரும்,

2. புலர் புகழ் ஞாயிறு - (தனது ஒளியாற் பயன் கொள்வார்) பலரும் புகழும் சூரியனை, கடல் கண்டாங்கு - (உதய காலத்திற்) கடலிற் கண்டாற்போல,

கடலின் பசுமை நிறமும் சூரியனது செந்நிறமும் மயிலின் நிறமும் முருகப்பெருமான் நிறமும் போலக் காட்சியளிப்பதால், இது வண்ணவுவமம்,

3. ஓ அற இமைக்கும் - (எக்காலமும்) ஒழிவறப் பிரகாசிக்கும், சேண் விளங்கு அவிர் ஒளி - தூரத்தில் விளங்கும் மிக்க பிரகாசத்தையும்,

உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதற் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து

---

4. உறுநர்த்தாங்கிய - (தன்னை) அடைபவரை (அவர் தீவினையைப் போக்கிப்) பாதுகாக்கும், மதன்உடை நோன் தாள் - ('யான், எனது' என்னும்) செருக்கை அழிக்கும் வலிய திருவடியையும்,

5. செறுநர்த் தேய்த்த - (தன் அருள் வழி நில்லாமல்) மாறுபட்டவரை அழித்த, செல் உறழ் தடக்கை - இடியை ஒத்த பெரிய கையையும் உடைய,

6. மறு இல் கற்பின் வாள் நுதல் கணவன் - குற்றம் இல்லாத கற்பையுடைய (இந்திரன் புதல்வியாகிய) தெய்வயானையின் கணவன், (வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியினையுடையாள் என அன்மொழித்தொகை)

7. கார்கோள் - மேகத்தாற்கொள்ளப்படுவதாகிய) கடலில், முகந்த - (நீரைக்) கவர்ந்ததனால் உண்டான, கமம் சூல் - நிறைவாகிய கருவையுடைய, மாமழை - கரிய மேகமானது,

8. வாள் போழ் விசும்பின் - மின்னொளி பிளக்கும் ஆகாயத்திலே, வள் உறை சிதறி - வளப்பமான துளிகளைச் சிந்தி,

9. தலைப்பெயல் - முதல் மழையானது, தலைஇய - பெய்த, தண் நறுங்கானத்து - குளிர்ச்சியான மணம் வீசும் காட்டிலே,

இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்,—

சூரர மகளிர் :

மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி,
கணைக்கால் வாங்கிய நுசுப்பின், பணைத்தோள்,
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்,

10. இருள் பட - இருள் உண்டாகும்படி, பொதுளிய - (தழைகள்) நெருங்கிய, பராரை - பருமையாகிய அடிமரத்தையுடைய, மராஅத்து - செங்கடம்பினது,

11. உருள் பூ – தேர் உருள் போன்ற (வட்டமாகிய) பூவினால் கட்டப்பட்ட, தண் தார் – குளிர்ச்சியான மாலை, புரளும் மார்பினன் – அசையும் மார்பத்தை உடையவன்,

12. மால் வரை - பெரிய மூங்கில்கள், நிவந்த - உயர்ந்து வளர்ந்த, சேண் உயர் வெற்பில் - ஆகாயத்தை அளாவ ஓங்கிய மலையிலே,

13. கிண்கிணி - சிறு சதங்கையை, கவைஇய – சூழக்கட்டிய, ஒள் செஞ்சீறடி - ஒளி பொருந்திய சிவந்த சிறிய பாதத்தையும்,

14. கணைக்கால் - திரண்ட காலையும், வாங்கிய – (நுடக்கத்தால்) வளைந்த, நுசுப்பின் - இடையையும், பணைத்தோள் – மூங்கிலைப்போன்ற தோளையும்,

15. கோபத்து அன்ன - (செந்நிறத்தினால்) இந்திர கோபம் என வழங்கும் (தம்பலப்) பூச்சியை ஒத்த, தோயாப் பூந்துகில் – சாயமேற்றாத பூத்தொழிலையுடைய (தெய்வத்தன்மை பொருந்திய) வஸ்திரத்தையும்,

பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்,
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்,
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழை,
சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனி,
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு

---

16. பல்காசு நிரைத்த - பல மணிகளை ஒழுங்குறக் கோத்த, சில் காழ் - எழுகோவை பொருந்திய 'காஞ்சி' என்னும் அணியை அணிந்த, அல்குல் - அரையையும்,

17. கை புனைந்து இயற்றா - கையால் அலங்கரித்துச் செய்யாத, கவின் பெறு - (தெய்வத்தன்மை பொருந்திய) அழகைத் (தமக்கு இயல்பாகவே) பெறுகின்ற, வனப்பின் - அழகையும்,

18. நாவலொடு பெயரிய - (நாவற்பழத்துச் சாறுபட்டுப் பேதமானபொன்னுகையால் அதைச்சார) 'சாம்பூநதம்' என்னும் பெயரைப் பெற்ற, பொலம் புனை - பொன்னாற் செய்யப்பட்ட, அவிர் இழை-விளங்கும் ஆபரணத்தையும்,

19. சேண் இகந்து விளங்கும் – தூர எல்லையைக் கடந்து விளங்கும், செயிர் தீர் மேனி – குற்றம் தீர்ந்த நிறத்தினையும் (உடைய சூரரமகளிர் என 41-ஆம் அடியுடன் அனுவயிக்க),

20. துணையோர் ஆய்ந்த – (தம்) தோழியர் அலங்கரித்த, இணை ஈர் ஓதி – (கடைப்பகுதி) ஒரே மட்டமாக ஒத்திருக்கின்ற நெய்ப்பையுடைய கூந்தலிலே,

21. செங்கால் வெட்சி - செந்நிறத்தாளையுடைய வெட்சிப்பூவின், சீறிதழ் இடை - சிறிய இதழ்களின் நடுவிலே,

பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்

---

22. பைந்தாள் குவளை - பசுமையான தண்டையுடைய குவளை மலரின், தூ இதழ் கிள்ளி இடுபு - பரிசுத்தமான இதழ்களைக் கிள்ளி இட்டு,

23. தெய்வ உத்தியொடு - சீதேவி வடிவாகச் செய்த தலைக்கோலத்துடன், வலம்புரி - வலம்புரி சங்கின் வடிவாகச் செய்த தலைக்கோலத்தையும், வயின் வைத்து-(அமைத்தற்குரிய) இடங்களிலே (தலையலங்காரமாக) அமைத்து,

24. திலகம் தைஇய - பொட்டு அணிந்த, தேம் கமழ் திருநுதல் - மணம் வீசும் அழகிய நெற்றியிலே,

25. மகரப் பகுவாய் - சுறு மீனின் பெரிய வாயினது வடிவாகச் செய்த அணியை, தாழ - தங்கும்படி, மண்ணுறுத்து - அலங்கரித்து,

26. துவர முடித்த - (அலங்காரத்தொழில்) முற்றுப்பெற முடித்த, துகள் அறு முச்சி - குற்றம் அற்ற கொண்டையிலே.

27. பெருந்தண் சண்பகம் செரீஇ - பெரிய குளிர்ச்சியான சண்பகப் பூவைச் செருகி, கருந்தகட்டு – கரிய தகடு போன்ற இலைகளையுடைய,

28. உளைப்பூ - விரிந்த பூவாகிய, மருதின் - மருதம் பூவினது, ஒள் இணர் - சிறந்த கொத்துகளை, அட்டி - (செண்பகப் பூவின் இடையில்) இட்டு,

கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்டளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்

---

29. கிளைக் கவின்று - (பலவாகக்) கிளையில் அரும்பீன்று அழகு பெற்று, எழுதரு - மேலே தோன்றுகின்ற, கீழ் நீர்ச்செவ்வரும்பு - கீழே நீரையுடைய சிறந்த மொட்டினாலே,

30. இணைப்புறு பிணையல் வளைஇ - கட்டுதலுற்ற மாலையைக் (கொண்டையைச்) சூழக்கட்டி, துணைத்தக- இணையொக்க,

31. வண்காது நிறைந்த - அழகிய காதிலே நிறைந்த, பிண்டி ஒள் தளிர் - அசோகமரத்தின் அழகிய கொழுந்துகள்,

32. நுண்பூண் ஆகம் திளைப்ப - நுட்பமான அணிகளையுடைய மார்பிலே அசைய, திண் காழ் - வலிய வயிரத்தையுடைய,

33. நறுங்குறடு உரிஞ்சிய - மணமுள்ள சந்தனக் கட்டையை அரைத்த, பூங்கேழ்த் தேய்வை - அழகிய நிறத்தையுடைய குழம்பை.

34. தேம் கமழ் மருது இணர் கடுப்ப - மணம் வீசுகின்ற மருத மரத்தினது பூங்கொத்தை (அப்பினாற்) போல, கோங்கின் - கோங்க மரத்தினது,

35. குவி முகிழ் - குவிந்த அரும்பைப்போன்ற, இளமுலைக்கொட்டி - இளமுலைகளிலே அப்பி, விரிமலர் - மலர்ந்த மலரையுடைய,

வேங்கை நுண்டாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
'கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதெ'ன்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்

---

36. வேங்கை நுண்தாது அப்பி - வேங்கை மலரின் நுட்பமான மகரந்தப்பொடிகளையும் (அந்தச் சந்தனக் குழம்பின்மீது) அழுத்தி, காண் வர - அழகு தோன்ற,

37. வெள்ளில் குறுமுறி - விளாமரத்தின் இளங் கொழுந்தை, கிள்ளுபு தெறியா - கிள்ளி (ஒருவர்மீது ஒருவர்) தெறித்து,

38. கோழி ஓங்கிய - கோழியைத் தன்மீது கொண்டுள்ள, வென்று அடு விறல் கொடி - (பகைவரை) வென்று அழிக்கும் வெற்றிக்கொடி,

39. பெரிது வாழிய என்று ஏத்தி - நீண்ட காலம் வாழ்வதாக என்று வாழ்த்தி, பலருடன் - பல பெண்டிருடன்,

40. சீர் திகழ் சிலம்பகம் - அழகு பெற்று விளங்குகின்ற மலையில், சிலம்பப் பாடி - ஆரவாரிக்கப் பாடி,

41. சூர் அரமகளிர் - அச்சத்தை விளைக்கும் தெய்வ மகளிர், ஆடுஞ்சோலை - விளையாடும் சோலையினையுடைய,

42. மந்தியும் அறியா - (மரமேறுவதிற் சிறந்த பழக்கமுடைய) குரங்குகளும் (ஏறி) அறியாத, மரம் பயில் - (வானளாவிய) மரங்கள் அடர்ந்த, அடுக்கத்து - மலைச்சரிவில்,

சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்,—
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்

பேய் மகள் :

உலறிய கதுப்பின் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்

---

43. சுரும்பு மூசா - (தெய்வத்தன்மை பொருந்தியதால்) தேனீக்கள் மொய்க்காத, சுடர்ப்பூங்காந்தள் - நெருப்பைப் போன்ற செங்காந்தள் மலரினது,

44. பெருந்தண் கண்ணி - மிகவும் குளிர்ச்சியான மாலையை, மிலைந்த சென்னியன் - சூடிய திருமுடியை உடையவன்,—

[அடி 45 முதல் 61 வரை ஒரு தொடர்]

45. பார் முதிர் பனிக்கடல் கலங்க - பூமியைச் சூழ்ந்த குளிர்ச்சியான சமுத்திரம் கலக்கமடையும்படி, உள் புக்கு - அதனுள் புகுந்து,

46. சூர் முதல் - (சூரபதுமன் என்னும்) அசுரர் தலைவனை, தடிந்த - கொன்ற, சுடர் இலை நெடுவேல் - எரிகின்ற இலைத் தொழிலையுடைய நெடிய வேலாயுதத்தாலே, ('மாமுதல் தடிந்த சேஎய்' என 61-ஆம் அடியுடன் முடிக்க.)

47. உலறிய கதுப்பின் - காய்ந்த மயிரையும், பிறழ் பல் - வரிசையாய் அமையாத பற்களையும், பேழ்வாய் - பெரிய வாயையும்,

48. சுழல் விழி - சுழல்கின்ற கருவிழியையும், பசுங்கண் - பசுமையான கண்களையும், சூர்த்த நோக்கின் - நடுக்கத்தைச் செய்த பார்வையையும்,

கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்,
குருதி ஆடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்தொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா

---

49. கழல் கண் கூகையொடு - பிதுங்கிய கண்களை யுடைய கோட்டானுடன், கடும்பாம்பு தூங்க - கடிய பாம்பு தூங்குவதனால்,

50. பெருமுலை அலைக்கும் - பெரிய முலைகளை வருத்துகின்ற, காதின் - காதுகளையும், பிணர் மோட்டு - (சுரசுரப்பான) சருச்சரையையுடைய பெரிய வயிற்றையும்,

51. உருகெழு செலவின் - (காண்பார்க்கு) அச்சம் மிகும் நடையையும் உடைய, அஞ்சு வரு பேய்மகள் - (காண்பார்க்குப்) பயமுண்டாகும் பேய்ப்பெண்,

52. குருதி ஆடிய - இரத்தத்தில் தோய்ந்த, கூர் உகிர்க் கொடுவிரல் - கூர்மையான நகத்தையுடைய கொடிய விரல்களால்,

53. கண் தொட்டு உண்ட - கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட, கழிமுடைக் கருந்தலை - மிக்க முடை நாற்றத்தையுடைய பெரிய தலையை,

54. ஒள் தொடித் தடக்கையின் ஏந்தி - பிரகாசம் பொருந்திய வளையும் விசாலமும் பொருந்திய கையில் எடுத்து, வெருவர-(அசுரர்க்கு) அச்சம் உண்டாகும்படி,

55. வென்று அடு விறற்களம் பாடி - (பகைவரை) வென்று அழிக்கின்ற வெற்றிக் களத்தைப் பாடி, தோள் பெயரா - தோள்களை அசைத்து,

நிணம்தின் வாயள் துணங்கை தூங்க,
இருபே ருருவின் ஒருபே ரியாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்,—

---

56. நிணம் தின் வாயள் - கொழுமையான மாமிசத்தைத் தின்கின்ற வாயையுடையவளாய், துணங்கை தூங்க - (இரு கைகளையும் முடக்கி விலாப்புறத்தில் ஒற்றியொற்றி அடித்து அசைந்தாடுகின்ற) துணங்கைக் கூத்தை ஆட,

57. இரு பேருருவின் ஒரு பேரியாக்கை - (மக்கள் வடிவும் மிருக வடிவும் பொருந்திய) இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்ருகிய பெரிய (சூரன்) உடல்,

58. வேறு அறு வகையின் - வேறு வேருக அற்று விழும் வண்ணம், அஞ்சு வர மண்டி - அச்சந்தோன்ற நெருங்கிச் சென்று,

59. அவுணர் நல்வலம் அடங்க - (சூரனை ஒழிந்த) அசுரர்களுக்கெல்லாம் நல்ல வெற்றி இல்லாமற்போகும்படி, கவிழ் இணர் - கீழ் நோக்கித் தொங்கும் பூங்கொத்துகளையுடைய,

60. மாமுதல் தடிந்த - மாமரத்தின் வடிவாயிருந்த (சூரபதுமன் என்னும்) தலைவனைக் கொன்ற, (தம்மை எதிர்ப்பவர் வலிமையிற் பாதியை அவுணர் பெறும்படி மந்திரம் கொண்டு சாதித்த மாமரம் இது என்பர்.) மறு இல் கொற்றத்து - குற்றமில்லாத வெற்றியையும்,

61. எய்யா நல்லிசை - (ஒருவராலும் இவ்வளவினது என்று அளந்து) அறிப்படாத நல்ல புகழையும், செவ்வேல் - செந்நிற வேலாயுதத்தையுமுடைய, சேஎய் - முதிராத வடிவையும் உடையவன்,—

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே :

திருப்பரங்குன்று :

செருப்புகன்று எடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்

---

62. சேவடி படரும் - (அவனுடைய) சிவந்த திருவடிகளை (நாடிச்) செல்லும், செம்மல் உள்ளமொடு - சிறப்பான மனத்துடன்,

63. நலம்புரி கொள்கை - நல்ல அறங்களைச் செய்கின்ற கருத்தினால், புரிந்து உறையும் புலம் - (அவன்) விரும்பித் தங்கும் இடத்திற்கு,

64. செலவு - செல்லுதலை, நீ நயந்தனை ஆயின் - நீ விரும்பினையானால், பலவுடன் - (நற்குணங்கள்) பலவும் சேர,

65. நன்னர் நெஞ்சத்து - நல்ல மனத்தில், இன்னசை - இனிய விருப்பமானது, வாய்ப்ப - சித்தியாகும்படி,

66. நீ முன்னிய வினை - நீ கருதிய (இனிய மோட்சத்தைப் பெறுவதாகிய) செயலை, இன்னே பெறுதி - இப்பொழுதே (அடையப்) பெறுவாய் :

67. செருப் புகன்று எடுத்த - போரைக்கருதி உயர்த்திய, சேண் உயர் நெடுங்கொடி - ஆகாயத்தில் ஓங்கிய நீண்ட கொடியும்,

68. வரிப்புனை பந்தொடு - நூலினால் கட்டியலங்கரித்த பந்தும், பாவை - பொம்மையும், தூங்க - (அறுப்பார் இல்லாமையால் கொடிக் கம்பத்தில்) தொங்க,

பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகின் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முட்டாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்தல் ஊதி எற்படக்

(என்றது, பகைவரைப் பெண்டிராகப் பாவித்து; அவர்கள் கொண்டு விளையாடுவதற்குத் தொங்கவிட்ட பந்தும் பாவையும் என அறிக.)

69. பொருநர்த் தேய்த்த - போர் செய்யும் பகைவரை அழித்ததனால், போர் அரு வாயில் - போர்த் தொழில் இல்லாமற்போன மதில் வாயிலையும்,

70. திரு வீற்றிருந்த - இலக்குமி சிறப்புடன் அமர்ந்திருந்த, தீது தீர் நியமத்து - குற்றம் நீங்கிய கடைத் தெருவையும்,

71. மாடம் மலி மறுகின் - மாளிகைகள் மிகுந்த தெருக்களையும் உடைய, கூடல் குடவயின் - மதுரைக்கு மேற்குப் புறத்தில்,

72. இருஞ்சேற்று அகல் வயல் - பெருஞ்சேற்றை யுடைய விசாலமான கழனியில், விரிந்து வாய் அவிழ்ந்த - (இதழ் முறுக்கு) நெகிழ்ந்து (மகரந்தப்பொடி தோன்றும்படி) மலர்ந்த,

73. முள் தாள் தாமரைத்துஞ்சி - சுணை பொருந்திய தண்டினையுடைய தாமரைப் பூவிலே உறங்கி, வைகறை - (நாலாம் சாமமாகிய) இருள் விடிவேளையில்,

74. கள் கமழ் நெய்தல் ஊதி - தேன் மணம் வீசும் நெய்தற்பூவின் தேனையுண்டு, எல் பட - சூரியன் உதயமாகும் போது,

கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன் ; அதாஅன்று,

---

75. கண்போல் மலர்ந்த - (மாதர்களின்) கண்களைப்போலப் பூத்த, காமர் சுனைமலர் - அழகிய சுனைப் பூக்களில்,

76. அம் சிறை வண்டின் - அழகிய சிறகையுடைய தேனீக்களின், அரிக்கணம் ஒலிக்கும் - அழகிய கூட்டம் ரீங்காரம் செய்யும்,

77. குன்று - திருப்பரங்குன்றிலே, அமர்ந்து - விரும்பி, உறைதலும் உரியன் - தங்குதலும் உரியன்.

(சிறந்த ஒளியையும் (3) பாதத்தையும் (4) கையையும் (4) உடையவனும், தெய்வயானையின் கணவனும், (6) மாலை அசையும் மார்புடையவனும், (11) காந்தள் மலர் மாலையைச் சூடிய திருமுடியை உடையவனும், (44) பெண் பேய் களித்துப்பாடி ஆடும்படி நீண்ட வேலாயுதத்தால் (56) அசுரனைக் கொன்ற வெற்றியையும் (60) புகழையும் சிவந்த வேலாயுதத்தையுமுடைய முதிராத் வடிவினனான முருகப்பெருமான் (61) திருவடியை நாடிச் செல்லும் மனத்துடன் (62) நீ செய்த புண்ணியத்தினால் அவன் விரும்பித் தங்குமிடத்திற்கு (63) நீ வழியை அறிய விரும்பினையானால், (64) உனது விருப்பப்படியே (65) நீ நினைத்ததை இப்பொழுதே பெறுவாய்; (66) அவன் மதுரைக்கு மேற்கிலுள்ள (71) திருப்பரங்குன்றில் தங்கியிருத்தலுமுரியன்.)

அதாஅன்று - அதுவன்றி,

[2. திருச்சீரலைவாய்]

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்டு

'**திருச்சீரலைவாய்**' என்பது, **திருச்செந்தூர்.** இது தென்கடற்கரையில் திருநெல்வேலிக்கு 36 கல் தொலைவில் உள்ளது. இது '**திருச்செந்தில்**' எனவும் வழங்கப்படும். கடற்கரையில் அலைகள் தவழுமிடத்தில் அமைந்திருப்பதுபற்றி '**அலைவாய்**' என வழங்கப்பட்டது.

78. வைந்நுதி பொருத - கூர்மையான நுனியை உடைய அங்குசத்தாற் குத்திய, வடு ஆழ் வரி நுதல் - தழும்பு ஆழ்ந்துள்ள புள்ளிகளையுடைய நெற்றியில்,

79. வாடாமாலை - வாடாத மாலையாகிய பொன்னரி மாலை, ஓடையொடு - நெற்றிப்பட்டத்துடன், துயல்வர - அசைய,

80. படு மணி இரட்டும் - பெரிய மணிகள் மாறி ஒலிக்கும், மருங்கின் - பக்கத்தையும், கடுநடை - வேகமான நடையையும் ('**பாடு**' என்பது '**படு**' எனக்குறுகி நின்றது. பாடு - பெருமை),

81. கூற்றத்து அன்ன - யமனைப்போன்ற, மாற்று அருமொய்ம்பின் - (பிறரால்) தடுத்தற்கு அரிய வலியினையும் உடைய,

82. கால் கிளர்ந்தன்ன - (ஓடும்போது) காற்று எழும்பினாற்போன்ற, வேழம் மேல் கொண்டு - யானையின் மீது ஏறி,

ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்

---

83. ஐவேறு உருவின் - ('தாமம், முகுடம், பதுமம், கோடகம், கிம்புரி' என்னும் முடியுறுப்பாகிய) ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய, செய்வினை முற்றிய - (முடிக்குச்) செய்யும் தொழிலெல்லாம் முற்றுப் பெற்ற,

84. முடியொடு விளங்கிய - கிரீடத்துடன் விளக்கமுற்ற, முரண் மிகு திருமணி - (நிறங்களால்) வேறுபாடு மிகுந்த அழகையுடைய பல இரத்தினங்களும்,

85. மின் உறழ் இமைப்பின் - மின்னலை யொத்த பிரகாசத்துடன், சென்னிப் பொற்ப - தலையிலே அழகுற விளங்க,

86. நகை தாழ்பு துயல்வரூஉம் - மணியொளி தங்கி அசையும், வகை அமை பொலம் குழை - (தொழிற்) கூறுபாடு நிறைந்த பொன்னாற்செய்த மகர குண்டலங்கள்,

87. சேண் விளங்கு இயற்கை - ஆகாயத்தில் விளங்கும் இயல்பினையுடைய, வாள் மதி கவைஇ - ஒளியை உடைய சந்திரனைச் சூழ்ந்து,

88. அகலா மீனின் - நீங்காத நடசத்திரங்களைப் போல, அவிர்வன இமைப்ப - ஒளி வீசுவனவாய் விளங்க,

தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனனேர்பு எழுதரு வாள்நிற முகனே

ஆறு முகங்கள் :

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ; ஒருமுகம்,
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே ; ஒருமுகம்,
மந்திர விதியின் மரபுளி வழாஅ

---

89. தா இல் கொள்கை – கேடு இல்லாத (விரதக்) கோட்பாட்டை உடைய, தம் தொழில் - (தவஞ்செய்த லாகிய) தமது வேலையை, முடிமார் – முடிப்பவருடைய,

90. மனன் நேர்பு எழுதரு - மனத்தில் நேராய்த் தோன்றுகின்ற, வாள் நிற முகனே - ஒளியையும் நிறத் தையுமுடைய திருமுகங்களில் ;

91-92. ஒருமுகம் - ஒரு திருமுகமானது, மா இருள் ஞாலம் - பேரிருளையுடைய உலகம், மறு இன்றி விளங்க - குற்றமில்லாமல் விளங்கும்படி, பல் கதிர் விரிந்தன்று - பல கிரணங்களையும் தோற்றுவித்தது ;

92-94. ஒரு முகம்-மற்றொரு திருமுகமானது, ஆர் வலர் ஏத்த - (தன்மீது) அன்புடைய அடியவர் (தன் னைத்) துதிக்க, அமர்ந்து - விரும்பி, இனிது ஒழுகி - (அவ் வடியவர்களுக்கு) மகிழ்ச்சியுண்டாகும்படி செய்து, காத லின் - விருப்பத்தோடு, உவந்து - களித்து, வரம் கொடுத் தன்று - (அவர்கள் வேண்டிய) வரங்களைக் கொடுத்தது;

94-96. ஒரு முகம் - வேறொரு திருமுகமானது, மந்திர விதியின் - மந்திரத்தையுடைய வேதத்திற் சொல் லிய, மரபுளி - முறையினால், வழாஅ - (சிறிதும்) தவறாத,

அந்தணர் வேள்விஓர்க் கும்மே ; ஒருமுகம்,
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே ; ஒருமுகம்,
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்

அந்தணர் - பிராமணருடைய, வேள்வி - யாகங்களை, ஓர்க்கும் - (தீங்கு நேராதபடி) கூர்ந்து கவனிக்கும் ;

96-98. ஒரு முகம் - இன்னொரு திருமுகமானது, எஞ்சிய பொருள்களை - (இவ்வுலகத்தில் ஆராய்ந்து அறியப்படாமல்) ஒழிந்த (வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் உள்ள நுட்பமான) அர்த்தங்களை, நாடி - ஆராய்ந்து, ஏம் உற - (முனிவர்கள்) இன்பம் அடையும்படி, திங்கள் போல - (கார்காலத்தில் தோன்றும்) சந்திரனைப் போல, திசை விளக்கும் - (அவற்றை அறியும்) வழிகளைத் தெரிவிக்கும் ;

98-100. ஒரு முகம் - பிறிதொரு முகமானது, செறுநர்த்தேய்த்து - அழித்தற்குரியவர்களாகிய அசுரர் முதலியவர்களை அழித்து, செல் சமம் முருக்கி - (தனது மனத்தில்) நிகழ்கின்ற (அனைவரையும் ஒரே மாதிரியாகப் பாதுகாக்கும்) நடுவு நிலைமையைக் கெடுத்து, கறுவு கொள் நெஞ்சமொடு - ('இவர்களைக் கொல்ல வேண்டும்!' என்று) கோபம் கொண்ட மனத்துடன், களம் வேட்டன்று - போர்க்கள வேள்வியை விரும்பியது ;

100-102. ஒரு முகம் - பின்னுமொரு திருமுகமானது, குறவர் மடமகள் - மலைக்குறவருடைய பெண்ணாகிய, கொடி போல் நுசுப்பின் - பூங்கொடியைப்போன்ற இடுப்பையுடைய, மடவரல் - இளம்பருவத்தினளான,

மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே.
ஆங்குஅம் மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்

வள்ளியொடு - வள்ளி நாய்ச்சியுடன், நகையமர்ந்தன்று - மகிழ்ச்சியிற்பொருந்தியது ;

103. ஆங்கு - அப்படி, அம்மூவிரு முகனும்- அந்த ஆறு திருமுகங்களும், முறை நவின்று ஒழுகலின் - அம்முறைமைகளிற் பழகிச் செயலாற்றுவதால் (அத்திரு முகங்களுக்குப் பொருந்தும் வண்ணம்)

104. ஆரம் தாழ்ந்த - பதக்கம் பொருந்திய, அம் பகட்டு மார்பின் - அழகையும் பெருமையையும் உடைய மார்பில் உள்ள,

105. செம்பொறி - (உத்தம இலட்சணமாகிய) சிவந்த மூன்று வரிகளையும், மொய்ம்பின் - (தன்னை எதிர்த்தவர்களின்) வலிமையையும், வாங்கிய - கவர்ந்து கொண்ட,

105-106. சுடர் விடுபு - ஒளி விட்டு, வண்புகழ் நிறைந்து - வளப்பம் பொருந்திய புகழ் மிகுந்து, வசிந்து- திரண்டு, வாங்கு நிமிர்தோள் - (வளையவேண்டுமிடம்) வளைந்து (நிமிரவேண்டுமிடம்) நிமிர்ந்து உயர்ந்த தோள் களில்,

('சுடரையுடைய ஆயுதங்களை விட்டுப் பகைவர் மார்பைப் பிளந்து உயிரை வாங்கும் உயர்ந்த தோள்களில்' என்றலுமாம்.)

பன்னிரு கைகள் :

விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை ; உக்கம் சேர்த்தியது ஒருகை ;
நலம்பெறு கலிங்கத்துக்குறங்கின்மிசை அசைஇயதொருகை;
அங்குசங் கடாவ ஒருகை, இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலந் திரிப்ப,

107–108. ஒரு கை - ஒரு திருக்கையானது, விண்செலல் மரபின் - ஆகாயத்தில் நடமாடும் இயல்பையுடைய, ஐயர்க்கு ஏந்தியது - தேவர்க்குப் பாதுகாப்பாக உயர்ந்தது ;

108. ஒரு கை - (ஏந்திய கைக்கு இணைந்த) மற்றொரு திருக்கரமானது, உக்கம் சேர்த்தியது - இடையில் வைத்தது ;

(இக்கைகள் பல கிரணங்களை வீசிய திருமுகத்திற்கு ஏற்றபடி கிரணங்களையுடைய சந்திரன் சூரியன் அக்கினி முதலிய தேவர்களுக்கு அசுரரால் துன்பம் நேரிடாதபடி பாதுகாப்பாய் அமைந்தன.)

109-110. ஒரு கை - ஒரு திருக்கரமானது, அங்குசம் கடாவ - அங்குசத்தால் யானையைச் செலுத்த, ஒரு கை - (அந்தத் திருக்கரத்திற்கு இணையாகிய) மற்றொரு திருக்கரமானது, நலம்பெறு கலிங்கத்து - அழகு பெற்ற ஆடையைத் தரித்த, குறங்கின்மிசை - துடையின்மேல், அசைஇயது - தங்கியது ;

(வரங்கொடுத்த திருமுகத்திற்கு ஏற்றபடி இக்கைகள் யானையின்மேல் எழுந்தருளி வந்து வரங்கொடுத்து ஆணையைச் செலுத்தியபடியைக் குறித்தன.)

110-111. இரு கை - இரண்டு திருக்கரங்கள், ஐ - அழகையும், இரு-பெருமையையுமுடைய, வட்டமொடு-

ஒருகை மார்பொடு விளங்க,
ஒருகை தாரொடு பொலிய, ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப, ஒருகை
பாடின் படுமணி இரட்ட, ஒருகை

கேடயத்துடன், எஃகு - வேலாயுதத்தையும், வலம் திரிப்ப - வலப்புறமாகச் சுழற்ற,

(இத்திருக்கரங்கள் வேள்வியைக் கூர்ந்து கவனிக்கும் திருமுகத்திற்கு ஏற்றபடி, வேள்விக்கு அசுரர்களால் தீமை நேரிடாதபடி காத்தன.)

112. ஒரு கை மார்பொடு விளங்க - (முனிவர்க்குத் தத்துவங்களைக் கூறிச் சொல்லைக் கடந்த பொருளை உணர்த்தும்போது) ஒரு திருக்கரமானது (மௌனக் குறியாய்) மார்புடன் பொருந்தி விளக்கஞ்செய்ய,

113. ஒரு கை - ஒரு திருக்கரமானது, தாரொடு பொலிய - மாலையோடு சேர்ந்து அழகு பெற,

(இத்திருக்கரங்கள் தெரியாத பொருள்களை விளக்கிய திருமுகத்திற்கு ஏற்ப மௌனக்குறியைக் குறிப்பித்தன.)

113-114. ஒரு கை - ஒரு திருக்கரமானது, கீழ் வீழ் தொடியொடு - (பகைவருடலைக்) கிழித்து விரும்பி அணியப்பட்ட வளையுடன், மீமிசைக் கொட்ப - (ஆயுதங்களை வீசுவதால்) மேன்மேலே சுழல,

114-115. ஒரு கை - ஒரு திருக்கரமானது, பாடு - பெருமையும், இன் - இசை இனிமையுமுடைய, படுமணி- வீரமணியை, இரட்ட - முழக்க,

(இத்திருக்கரங்கள் போர்க்களத்தை விரும்பிய திருமுகத்திற்கு ஏற்ப அமைந்தன.)

நீனிற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட,
ஆங்குஅப் பன்னிரு கையும் பாற்பட இயற்றி,
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந் திசைப்ப, வால்வளை நரல,
உரம்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு

115–116. ஒரு கை – ஒரு திருக்கரமானது, நீல் நிற விசும்பின் – நீல நிறத்தையுடைய மேகத்தால், மலி துளி பொழிய – மிகுந்த மழையைப் பெய்விக்க,

116-117. ஒரு கை - ஒரு திருக்கரமானது, வான்– தேவர் உலகத்தில், அரமகளிர்க்கு – தேவமகளிரான தெய்வயானையாருக்கு, வதுவை சூட்ட – மணமாலையைச் சூட்ட,

(இத்திருக்கரங்கள் வள்ளியோடு மகிழ்ந்திருந்த திருமுகத்திற்கு ஏற்ப, உயிர்களின் போகத்தின்பொருட்டு மழையைப் பெய்வித்து, தெய்வயானையார்க்கு மணமாலையும் சூட்டியவாறு காண்க.)

118. ஆங்கு - அவ்வாறு, அப்பன்னிரு கையும் – அந்தப் பன்னிரண்டு திருக்கரங்களும், பாற்பட - (ஆறு திருமுகங்களுக்கும் ஏற்ற) முறைமையிற் பொருந்த, இயற்றி – (தமக்குரிய) தொழிலைச்செய்து,

119. அந்தரம் - ஆகாயத்திலுள்ள, பல்லியம் - ('துந்துமி' என்னும்) வாத்தியம், கறங்க – ஒலிக்க,

119-120. திண்காழ் - வலிய வயிரத்தையுடைய, வயிர் – ஊது கொம்பானது, எழுந்து இசைப்ப – மிகுந்து ஒலிக்க, வால் வளை– வெள்ளிய சங்கானது, நரல– முழங்க,

121. உரம் தலைக்கொண்ட - வலிமையைத் தன்னிடத்திற்கொண்ட, உரும் இடி முரசமொடு–பேரிடியை ஒத்த முரசத்துடன்,

பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ,
விசும்புஆ றாக விரைசெலல் முன்னி,
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே ; அதான்று,

---

122. பல் பொறி – பல கண்களையுடைய பீலிகள் பொருந்திய, மஞ்ஞை – மயிலும், வெல் கொடி – வெற்றிக் கொடியாகிய கோழியும், அகவ - ஒலிக்க,

123. விசும்பு – ஆகாயமே, ஆறு ஆக – வழியாய் அமைய, விரை செலல் முன்னி – விரைந்த நடையைக் கருதி,

124. உலகம் புகழ்ந்த – உலகத்தில் உள்ள நல்லவர் புகழ்ந்த, ஓங்கு உயர் விழுச்சீர் - மிகவும் உயர்ந்த சிறந்த புகழையுடைய,

125. அலைவாய்ச் சேறலும் - கடற்கரைப் பதியாகிய திருச்செந்தூர் என்னும் திருப்பதியிலே செல்லுதலும், நிலைஇய பண்பு – (முருகப்பெருமானுக்கு) நிலைத்த இயல்பாகும் ; அதான்று - அதுவும் அல்லாமல்,

[3. திருவாவினன்குடி]

முனிவர் :

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு

திருவாவினன்குடி—பழனி; இது, மதுரை மாவட்டத்தைச் சார்ந்ததும் முருகக்கடவுள் படை வீடுகள் ஆறனுள் ஒன்றுமாகும்.

126. சீரை தைஇய உடுக்கையர் — மரவுரியை உடுத்த உடையினரும், சீரொடு - அழகுடன்,

127. வலம்புரி புரையும் வால் நரை முடியினர் - (தனது வடிவாலும் நிறத்தாலும்) வலம்புரி சங்கை ஒத்து விளங்கும் வெண்மையான நரைத்த முடியை உடையவரும்,

128. மாசு அற இமைக்கும் உருவினர் – குற்றமற விளங்கும் நிறத்தை உடையவரும், மானின் – மானினது,

129. உரிவை தைஇய – தோலைப் போர்த்திய, ஊன் கெடு மார்பின் - தசை வற்றிய மார்பிலே,

130. என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் – எலும்புகள் தோன்றி அசையும் உடம்பை உடையவரும், நன்பகல் - நல்ல நாட்கள்,

131. பல உடன் கழிந்த உண்டியர் - பல ஒருசேரக் கழிந்த உணவை உடையவரும், இகலொடு – பகையுடன்,

**செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்ரோர் அறியா அறிவினர் கற்ரோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புக,**

கந்தருவர் :

புகைமுகந் தன்ன மாசில் தூவுடை

---

132. செற்றம் நீக்கிய மனத்தினர் – கோபத்தையும் போக்கிய மனத்தை உடையவரும், யாவதும் – சிறிதும்,

133. கற்ரோர் அறியா அறிவினர் - கற்றவரால் அறியலாகாத (இயற்கை) அறிவை உடையவரும், கற்ரோர்க்கு - கற்றவர்களுக்கு,

134. தாம் வரம்பு ஆகிய தலைமையர் – தாம் எல்லையாய் நின்ற முதன்மையை உடையவரும், காமமொடு – ஆசையுடன்,

135. கடுஞ்சினம் கடிந்த காட்சியர் - கடுமையான கோபத்தையும் வெறுத்து நீக்கிய அறிவை உடைவரும், இடும்பை - வருத்தத்தை,

136. யாவதும் அறியா இயல்பினர் – சிறிதும் அறியாத தன்மையை உடையவரும், மேவர – மனம் பொருந்த,

137. துனி இல் காட்சி – வெறுப்பு இல்லாத நல்ல அறிவையுடையவருமாகிய, முனிவர் – முனிவர்கள், முன்புக – முன்னே செல்லவும்,

138. புகை முகந்து அன்ன – (கைகளால்) புகையை அள்ளினுற்போன்ற (மென்மை பொருந்திய), மாசு இல் தூ உடை - அழுக்குப் படிதல் இல்லாத சுத்தமான உடையையும்,

முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம்பு உளர,

கந்தருவ மகளிர் :

நோயின்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்

---

139. முகை வாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்து - அரும்புகள் வாய் திறக்கப்பெற்ற மாலை சூழ்ந்த மார்பையும்,

140. செவி நேர்பு வைத்த - (கூர்மையான பண்பு வாய்ந்த) காதில் (பொருத்தி இசைத்து) அளந்து (சுருதி கூட்டி) வைத்த, செய்வு உறு - பண்படுத்தப்பட்ட, திவவின் - நரம்புகளையுடைய,

141. நல் யாழ் நவின்ற - அழகிய யாழிசையிலே பயின்ற, நயன் உடை நெஞ்சின் - அன்புடைய மனத்தால்,

142. மெல் மொழி மேவலர் - மென்மையான சொற்களைப் பேசுவதில் விருப்பமுடையவராகிய கந்தருவர், இன் நரம்பு உளர - இனிய நரம்புகளை மீட்டி இசையெழுப்ப,

143. நோய் இன்று இயன்ற யாக்கையர்-(மக்களை வருத்தும்) நோய்கள் இல்லாமல் சிருட்டிக்கப்பட்ட உடலை உடையவரும், மாவின் - மாமரத்தின்,

144. அவிர் தளிர் புரையும் மேனியர் - விளங்கும் கொழுந்தையொத்த நிறத்தை உடையவரும், அவிர் தொறும் - விளங்கும்போதெல்லாம்,

பொன்னுரை கடுக்கும் திதலையர் இன்னகைப்
பருமம் தாங்கிய பணிந்தேந்து அல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்க,

திருமால் :

கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்று
அழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும், வெள்ளேறு

---

145. பொன் உரை கடுக்கும் திதலையர் - பொன்னின் தேய்வை ஒத்து விளங்கும் அழகுத்தேமலை உடையவரும், இன் நகை - இனிய ஒளியை உடைய,

146. பருமம் தாங்கிய - மேகலாபரணத்தைத் தாங்கிய, பணிந்து ஏந்து அல்குல் - தாழ்ந்து உயர்ந்த இடையை உடையவரும் ஆகிய,

147. மாசு இல் - குற்றம் இல்லாத, மகளிரொடு - (கந்தருவ) மகளிருடன், மறு இன்றி விளங்க - (யாழின் பாடல்) குற்றம் இல்லாமல் விளங்க,

148. கடுவொடு ஒடுங்கிய தூம்பு உடை வால் எயிற்று - விஷத்துடன் சுருங்கிய துளையை உடைய வெண்மையான பற்களையும்,

149. அழல் என உயிர்க்கும் - நெருப்பைப்போல மூச்சு விடும், அஞ்சு வரு கடுந்திறல் - (பார்ப்பவர்க்கு) அச்சமுண்டாகும் மிகுந்த வலிமையையும் உடைய,

150. பாம்பு பட - பாம்பானது இறக்கும்படி, புடைக்கும் - (அதை) மோதுகின்ற, பல் வரிக் கொடுஞ் சிறை-பல கோடுகளையுடைய வளைந்த சிறகுகளையுடைய,

151. புள் அணி நீள்கொடிச் செல்வனும் - கருடன் உருவைத் தாங்கிய நீண்ட கொடியை உடைய திருவாளனை திருமாலும்,

உருத்திரன் :

வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்,

இந்திரன் :

நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை

151-154. வெள்ளேறு - வெள்ளெருதின் உருவந் தீட்டிய கொடியை, வலவயின் உயரிய - வலப்பக்கத்தில் வெற்றிக்கொடியாகத் தூக்கியவனும், பலர் புகழ் திணி தோள் - பலரும் புகழும் வலிய தோள்களையும், இமையா முக்கண் - மூடித்திறத்தலில்லாத மூன்று கண்களையும் உடையவனும், உமை அமர்ந்து விளங்கும் - பார்வதி விரும்பி ஒரு பாகத்தில் விளங்கப்பெற்றவனுமாகிய, மூ எயில் முருக்கிய - திரிபுரங்களை எரித்தழித்த, முரண் மிகு செல்வனும் - வலிமை மிகுந்த சிவபிரானும்,

155-159. நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து - ஆயிரம் கண்களையும், நூறு பல் வேள்வி முற்றிய - நூறு என்னும் எண்ணுகிய பல யாகங்களை முடித்துப்பெற்ற, வென்று அடு கொற்றத்து - (பகைவரை) வென்று கொல்லும் வெற்றியையும், ஏந்திய ஈரிரண்டு மருப்பின் - தாங்கிய நான்கு தந்தங்களையும், எழில் நடை - அழகிய நடையையும், தாழ் பெருந்தடக்கை - தொங்குகின்ற பெரிய வளைவான துதிக்கையையுமுடைய, உயர்ந்த யானை - (யாவரும்) சிறப்பித்துப் பேசும் (ஐராவதம் என்னும்) வெள்ளையானையின், எருத்தம் ஏறிய - பிடரியில்

எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்,
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வர,

ஏறிய, திருக்கிளர் செல்வனும் - செல்வம் மிகுந்தவனான இந்திரனும்,

160. நாற்பெருந்தெய்வத்து - நான்கு பெருந்தெய்வங்களாகிய திக்குப்பாலகர் காவலையுடையதும், நல் நகர் நிலை இய - நல்ல ஊர்கள் நிலை பெற்றிருப்பதுமாகிய,

161. உலகம் காக்கும் - உலகத்தைப் பாதுகாக்கும், ஒன்று புரி கொள்கை - ஒன்றையே செய்கின்ற கருத்தையுடையவர்களும்,

162. பலர் புகழ் - பலரால் புகழப்படுபவர்களுமாகிய, மூவரும் - (பிரமன், திருமால், சிவன் என்னும்) மூன்று பேர்களும், தலைவர் ஆக - தலைவர்களாய் இருத்தலால்,

163. ஏமுறு ஞாலந்தன்னில்-இன்பத்தை உடைய பூலோகத்தில், தோன்றி - எழுந்தருளி,

164. தாமரை பயந்த-(திருமாலின் உந்தித்தாமரை) தோற்றுவித்த, தா இல் ஊழி - அழிவு இல்லாத நீண்ட காலமாகிய வாழ்நாளையுடைய,

165. நான்முக ஒருவன் சுட்டி - நான்கு முகங்களையுடைய பிரமதேவன் காரணமாக, காண் வர - (தன்னைத்) தரிசிக்க,

முப்பத்து மூவர் :

பகலிற் றோன்றும் இகலில் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட

[166-174 அடிகள் தேவர் முப்பத்து மூவரும், பதினெண் தேவ கணங்களும் திருமால் முதலியவருடன் வந்து முருகனைத் தரிசித்தலைக் கூறும்.]

166. பகலின் தோன்றும் இகல் இல் காட்சி - சூரியனைப் போலக் காணப்படும் மாறுபாடு இல்லாத தோற்றத்தையும்,

167. நால் வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு - நான்கு வகையாக வேறுபட்ட இயல்பினையும் உடைய முப்பத்து மூவரும்,

168. ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர் - பதினெட்டு வகையான உயர்நிலையைப் பெற்ற தேவ கணங்களும்,

169. மீன் பூத்து அன்ன தோன்றலர் -(வானத்தில்) நட்சத்திரங்கள் தோன்றினாற்போலும் தோற்றமுடையவரும், மீன் சேர்பு - நட்சத்திரங்களை அடைந்து,

170. வளி கிளர்ந்து அன்ன செலவினர் - காற்று எழுந்ததுபோன்ற நடையை உடையவரும், வளியிடை - காற்றில்,

171. தீ எழுந்து அன்ன திறலினர் - நெருப்பு எழுந்தாற்போன்ற வலிமையை உடையவர்களும், தீப்பட - நெருப்பு உண்டாகும்படி,

உரும்இடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கின்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன் ; அதான்று,

---

172. உரும் இடித்து அன்ன குரலினர் - இடி இடித்தாற்போன்ற குரலை உடையவர்களுமாய், விழுமிய - சிறந்த,

173. தம் உறு குறை மருங்கில் - தாம் அடைந்த குறை (தீர்க்கும்) வகையில், பெறும் முறை கொண்மார் - தாம் பெற வேண்டிய முறையிலே கொள்ளும்பொருட்டு,

174. அந்தரக் கொட்பினர் உடன் வந்து காண - ஆகாயத்தில் சுழற்சியை உடையவர்களாய் ஒருங்கு வந்து தரிசிக்கும்படி,

175. தா இல் கொள்கை மடந்தையொடு - கெடுதல் இல்லாத கற்பையுடைய பெண்மணியாகிய **தெய்வயானையம்மையுடன்**, சில் நாள் - சில காலம்,

176. ஆவினன்குடி அசைதலும் உரியன் - பழனி என்னும் திருப்பதியில் இருத்தலும் உரிமையாக உடையவன் ; அதா அன்று - அதுவுமல்லாமல்,

[4. திருவேரகம்]

அந்தணர் :

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து

திரு ஏரகம் - முருகக் கடவுளின் ஆறு படை வீடுகளுள் ஒன்று ; '**சுவாமி மலை**' என்று வழங்கப்படுவது ; சோழ நாட்டில் காவிரியின் வடகரையில் கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது.

177. இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது - (ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும்) ஆறு தொழில்களாய்ப் பொருந்திய இயல்பிலிருந்து தவறாமல்,

178. இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி - (தாய் தந்தையராகிய) இருவரைக் குறித்த பல வேறு கோத்திரத்தில்,

179. அறு நான்கு இரட்டி யாண்டு நல் இளமை - நாற்பத்தெட்டாகிய வருடங்களையுடைய நல்ல இளமைப் பருவத்தை,

180. ஆறினிற் கழிப்பிய - நல்வழியிற் கழித்த, அறன் நவில் கொள்கை - தருமத்தையே சொல்லிக் கொண்டிருக்கும் கருத்தையுடைய.

181. மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து - (காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி என்னும்

இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல,
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ,
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி

நாற்சதுரமும், முக்கோணமும், வில் வடிவுமாய்) மூன்று வகையாக வளர்க்கப்பட்ட மூன்று தீயாகிய செல்வத்தை யுடைய,

182. இரு பிறப்பாளர் - அந்தணர்கள், பொழுது அறிந்து நுவல - (துதித்தற்குரிய) சமயமறிந்து துதி கூற,

183. ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண்- ஒன்பது இழைகளைக் கொண்ட மூன்று புரிகளாலான நுட்பமான பூணூலைத் தரித்து,

184. புலராக் காழகம் புலர உடீஇ - உலராத ஆடையை (உடம்பிலேயே) உலரும்படி உடுத்து,

185. உச்சிக் கூப்பிய கையினர் - தலையிற் குவித்த கைகளையுடையவராய், தற்புகழ்ந்து - (முருகனாகிய) தன்னைப் போற்றி,

186. ஆறு எழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி- ஆறு எழுத்துக்களைத் தன்னுட்கொண்ட அரிய இரகசிய மந்திரத்தை,

187. நா இயல் மருங்கின் நவிலப் பாடி - நாக்கு அசையும் அளவில் பல முறை உச்சரித்து,

விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன் ; அதான்று,

---

188. விரை உறு நறுமலர் ஏந்தி - மணம் பொருந்திய நல்ல பூக்களைக் கொண்டு (அருச்சிக்க), பெரிது உவந்து - மிக மகிழ்ந்து,

189. ஏரகத்து உறைதலும் உரியன் - திருவேரகம் என்னும் சுவாமி மலையில் தங்கியிருத்தலும் உரிமையாக உடையவன் ; அதாஅன்று - அதுவுமல்லாமல்,

[5. குன்றுதோருடல்]

வேலன் :

பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்

குறமகளிர் :

கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்

[190—217 அடிகள், முருகக் கடவுள் ஒவ்வொரு குன்றிலும் திருவிளையாடல் செய்தருளுதலைக் குறிக்கும்.]

190. பைங்கொடி நறைக்காய் இடை இடுபு - பசுமையான படர்கொடியாலே நறுமணமுடைய சாதிக் காய்களை நடுவிலே இட்டு, வேலன் - முருக பூசாரியானவன்,

191. அம்பொதி புட்டில் விரைஇ - அழகிய பொருளை அமைக்கும் புட்டிலைப்போன்ற தக்கோலக் காயைக் கலந்து, குளவியொடு - காட்டு மல்லிகையுடன்,

192. வெண்கூதாளம் தொடுத்த கண்ணியன் - வெண்டாளிப் பூவையும் சேர்த்துக் கட்டிய மாலையை உடையவனாய்,

193. நறுஞ்சாந்து அணிந்த கேழ் கிளர் மார்பின் - மணம் வீசும் சந்தனத்தைப் பூசிய நிறம் விளங்கும் மார்பையுடைய,

194. கொடுந்தொழில் வல் வில் கொலைஇய கானவர் - கொடியசெயலையும் வலிய வில்லால் கொலை செய்தலையுமுடைய குறவர்,

நீடமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரலுளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்

---

195. நீடு அமை விளைந்த தேன் கள் தேறல்-நீண்ட மூங்கிற்குழாயில் வார்த்துப் பதப்படுத்தப்பட்ட தேனாகிய கள்ளின் தெளிவை,

196. குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து - மலையில் உள்ள சிற்றூரில் வாழும் சுற்றத்தாருடன் குடித்துக் களித்து,

197. தொண்டகச் சிறுபறைக் குரவை அயர - தொண்டகம் என்னும் சிறிய பறையின் ஒலிக்கு இசையக் குரவைக் கூத்தாட,

198. விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங் கான் - விரலினால் மலர்த்துவதனால் மலர்ந்த வெவ்வேறு வகையான இனிய வாசனையையுடைய,

199. குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி - ஆழமான சுனை நீரிற்பூத்த பூவினால் தொடுத்த வண்டுகள் மொய்க்கின்ற தலை மாலையையும்,

200. இணைத்த கோதை - இரட்டைப் பூவாகக் கட்டிய மாலையையும், அணைத்த கூந்தல் - சூடின கூந்தலுடன்,

201. முடித்த குல்லை - தலையிலணிந்த கஞ்சங் குல்லையையும், இலை உடை நறும்பூ - இலையை உடைய வாசனை பொருந்திய பூக்களையும்,

**செங்கால் மராஅத்த வாலிணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்**

---

202. செங்கால் மராஅத்த வால் இணர் - சிவந்த அடிமரத்தையுடைய கடம்பமரங்களிற்பூத்த வெண்மையான பூங்கொத்துகளையும், இடை இடுபு - நடுவில் அமைத்து,

203. சுரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத் தழை - தேன் வண்டுகள் தேனை உண்ணும்படி தொடுக்கப்பட்ட பெரிய குளிர்ச்சியான அழகிய தழை உடையை,

204. திருந்து காழ் மேனி திளைப்ப உடீஇ - திருத்தமான வடங்கள் பொருந்திய இடையில் அசையும்படி உடுத்து,

205. மயில் கண்டு அன்ன மடநடை மகளிரொடு - மயிலைக் கண்டாலொத்த தளர்நடையையுடைய பெண்டிருடன்,

206. செய்யன் - செந்நிறத்தனாய், சிவந்த ஆடையன் - சிவந்த ஆடையை உடையவனாய், செவ்வரை - செந்நிறமான அடிமரத்தையுடைய,

207. செயலைத் தண் தளிர் துயல்வரும் காதினன் - அசோக மரத்தின் குளிர்ச்சியான கொழுந்து அசையும் காதுகளையுடையவனாய்,

208. கச்சினன் - அரைக்கச்சையையுடையவனாய், கழலினன் - வீரகண்டையையணிந்த காலையுடையவனாய், செச்சைக் கண்ணியன் - வெட்சி மலர் மாலையைச் சூடியவனாய்,

குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொழுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்

---

209. குழலன் - புல்லாங்குழலை உடையவனாய், கோட்டன் - ஊதுகொம்பையுடையவனாய், குறும்பல்லியத்தன் - பல வாத்தியங்களை வாசிப்பவனாய்,

210-211. தகரன் - ஆட்டுக்கிடாயை வாகனமாக உடையவனாய், மஞ்ஞையன் - மயிலை ஏறி நடத்துபவனாய், புகர் இல் சேவல் அம் கொடியன் - குற்றமில்லாத கோழிக்கொடியையுடையவனாய்,

211. நெடியன் - நீண்ட உருவமுடையவனாய், தொடிஅணிதோளன் - வாகுவலையம் அணிந்த தோள்களை உடையவனாய்,

212. நரம்பு ஆர்த்து அன்ன இன்குரல் தொழுதியொடு - யாழின் நரம்பு இசையெழுப்பினுலொத்த இனிய குரலையுடைய மகளிர் கூட்டத்துடன்,

213. குறும்பொறி கொண்ட - சிறிய புள்ளிகளைக் கொண்ட, நறுந்தண் சாயல் - மணம் பொருந்திய குளிர்ச்சியான மென்மையுடையதாய்,

214. மருங்கில் கட்டிய - இடையிலே உடுத்த, நிலன் நேர்பு துகிலினன் - நிலத்தில் படிகின்ற வஸ்திரத்தையுடையவனாய்,

4

முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலும் நின்றதன் பண்பே; அதான்று,

---

215. முழவு உறழ் தடக்கையின் - மத்தளத்தையொத்த பருத்த நீண்ட கைகளால், இயல ஏந்தி - பொருந்தத்தாங்கி,

216. மென்றோள் பல் பிணை – மென்மையான தோள்களையுடைய பல பெண்மான்போலும் மகளிரை, தழீஇ - தழுவி, தலைத்தந்து - அவர்களுக்குக் கைலாகு கொடுத்து,

217. குன்றுதொறு ஆடலும் - ஒவ்வொரு மலையிலும் சென்று திருவிளையாடல் புரிதலும், நின்ற தன் பண்பு - நிலைபெற்ற அவனது குணமாகும்; அதாஅன்று - அதுவுமல்லால்,

[6. பழமுதிர் சோலை]

முருகன் உறையும் இடங்கள் :

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்,
ஆர்வலர் ஏத்த மேவரும் நிலையினும்,
வேலன் தைஇய வெறியயர் களனும்,
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்,

[218—249 அடிகள், முருகக்கடவுள் காட்சியளிக்கும் மற்றும் சில இடங்களை விளக்கும்.]

218. சிறுதினை மலரொடு விரைஇ - சிறிய தினையரிசியைப் பூக்களோடு கலந்து வைத்து, மறி அறுத்து- ஆட்டுக்கிடாயை அறுத்து,

219. வாரணக் கொடியொடு - கோழிக்கொடியோடு, வயின்பட நிறீஇ - (தான்) அவ்விடத்தில் நிலை பெறும்படி நிறுத்தி,

220. ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும் - ஒவ்வோர் ஊரிலும் செய்ய எடுத்துக்கொண்ட சிறப்புப் பொருந்திய விழாக்களிலும்,

221. ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும் - அன்பர்கள் துதிக்க விரும்பிச் செல்லும் இடங்களிலும்,

222. வேலன் தைஇய வெறி அயர் களனும் – பூசாரி அமைத்து வைத்த தெய்வமாடுகின்ற இடத்திலும் (குறி மேடைகளிலும்),

223. காடும் காவும் கவின் பெறு துருத்தியும்-காட்டிலும் சோலையிலும் அழகு பெற்ற ஆற்றிடையில் உள்ள திட்டிலும்,

யாறும் குளனும் வேறுபல் வைப்பும்,
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்,
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

முருகாற்றுப்படுத்தல் :

மாண்டலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யொடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி

---

224. யாறும் குளனும் வேறு பல் வைப்பும் – ஆற்றங்கரையிலும் குளக்கரையிலும் வேறு பல இடங்களிலும்

225. சதுக்கமும் - நான்கு தெருக்கள் கூடும் இடத்திலும், சந்தியும் - (மூன்று தெருக்களும் ஐந்து தெருக்களும் கூடும்) சந்திகளிலும், புதுப்பூங்கடம்பும் – புதிய மலர்களையுடைய கடம்ப மரத்திலும்,

226. மன்றமும் – ஊர் நடுவிலுள்ள மரத்தடியிலும், பொதியிலும் - அம்பலத்திலும், கந்து உடை நிலையினும் - (பசு உராய்ந்து தினவு தீர்தற்காக நடப்பட்ட) கற்றூண்கள் உள்ள இடத்திலும்,

227. மாண் தலைக் கொடியொடு – சிறப்பும் முதன்மையும் வாய்ந்த கோழிக்கொடியுடன், மண்ணி – அலங்கரித்து, அமை வர – பொருத்தமாகும்படி.

228. நெய்யொடு ஐயவி அப்பி – எண்ணெயுடன் வெண்சிறு கடுகையும் (திருஷ்டி நீக்கத்திற்காக உச்சியில்) அப்பி, ஐது உரைத்து – (வழிபாட்டுக்குரிய மந்திரத்தை) மெல்ல உச்சரித்து,

229. குடந்தம்பட்டு – கும்பிட்டு, கொழு மலர் சிதறி - அழகிய மலர்களைத் தூவி,

முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை

---

230. முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ – (ஒன்றோடொன்று) வித்தியாசப்பட்ட நிறங்களையுடைய இரண்டு ஆடைகளை (உள்ளொன்றும் வெளியிலொன்றுமாக,) சேர அணிந்து,

231. செந்நூல் யாத்து – சிவந்த நூலைக் கையில் காப்பாகக் கட்டி, வெண்பொரி சிதறி - வெண்ணிறமான நெற்பொரியைத் தூவி,

232. மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடை - மிகுந்த வலிமை நிலை பெற்ற பெரிய கால்களைக்கொண்ட கொழுத்த ஆட்டுக்கிடாயின்,

233. குருதியொடு விரைஇய - இரத்துடன் கலந்த, தூவெள்ளரிசி - தூய வெள்ளைப்பச்சரிசியை,

234. சில் பலி செய்து - சிறுபலியாகப் பல பக்கங்களிலும் எறிந்து, பல் பிரப்பு இரீஇ – பல நிவேதனப் பொருள்களைப் படையலிட்டு,

235. சிறு பசு மஞ்சளொடு–சிறிய பசுமஞ்சளுடன், நறுவிரை தெளித்து - (சந்தனம் முதலிய) இனிய வாசனைப்பொருள்களைத் தெளித்து,

236. பெருந்தண் கணவீர நறுந்தண்மாலை – பெரிய குளிர்ச்சியான செவ்வலரி மலராலான இனிய குளிர்ந்த மாலைகளை,

துணையற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியொடு இன்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க

---

237. துணை உற அறுத்து - ஓரளவினவாக அமைய அரிந்து, தூங்க நாற்றி – அசையும்படி தொங்கவிட்டு,

238. நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி – நெருங்கிய மலைச்சாரலில் உள்ள நல்ல ஊர்களை வாழ்த்தி,

239. நறும்புகை எடுத்து - வாசனை பொருந்திய தூபங் காட்டி, குறிஞ்சி பாடி - (மலை நாட்டிற்குரிய) குறிஞ்சிப்பண்ணைப்பாடி,

240. இமிழ் இசை அருவியொடு – முழங்கும் ஒலியையுடைய மலையாற்றுடன், இன்னியம் கறங்க – இனிய வாத்தியங்களும் சேர்ந்து ஒலி செய்ய,

241. உருவப் பல்பூத் தூஉய் - செந்நிறத்தை உடைய பல மலர்களைத் தூவி, வெருவர - (காண்போர்) அஞ்சுமாறு,

242. குருதிச் செந்தினை பரப்பி – இரத்தங்கலந்து பிசைந்த செந்தினை அரிசியையும் (கலங்களில்) பரப்பி வைத்து, குறமகள் – குறத்தி,

243. முருகு இயம் நிறுத்து – முருகனுக்குரிய வாத்தியங்களை வாசிக்கச் செய்து, முரணினர் உட்க - (தெய்வம் இல்லை என்னும்) மாறுபட்ட கொள்கையையுடையவர் அஞ்சும்படி,

முருகாற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த வாறே.

---

244. முருகு ஆற்றுப்படுத்த – முருகக்கடவுளை வரவழைத்த, உரு கெழு வியன் நகர் - அச்சம் பொருந்திய விசாலமான மலைக்கோயிலிலும்,

245-246. ஆடு களம் சிலம்பப் பாடி–தெய்வமாடுமிடத்தில் எதிரொலி செய்யுமாறு பாடி, கோடு பலவுடன் வாய் வைத்து – ஊதுகொம்புகள் இரண்டை ஒன்றாக வாயில் வைத்து ஊதி, கொடுமணி இயக்கி - பேரொலி செய்யும் மணிகளை ஒலிக்கச்செய்து,

247. ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி – தோற்றோடாத வலிமையையுடைய பிணிமுகம் என்னும் (முருகனுக்குரிய) யானையை வாழ்த்தி,

248. வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட – விரும்பியவர் விரும்பியபடி (வரங்களைப்) பெற்று வழிபாடு செய்துகொண்டிருக்க,

249. ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த ஆறு – (முன் கூறிய அவ்வவ்விடங்களில் (முருகன்) தங்கியிருத்தலும் நான் அறிந்த முறையேயாகும்.

[250–295. அடிகள், முருகன் அருளைப் பெற்றவன் அவ்வருளைப் பெற விரும்புவோனை, 'நீ முருகனை அடைந்தால், வேண்டுவன பெறுவாய்,' எனக் கூறுவதை விளக்கும்.]

ஆண்டாண்டு ஆயினும் ஆக ; காண்தக
முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி,
‘ நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ !
ஆல்கெழு கடவுட் புதல்வ ! மால்வரை

---

250. ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக – யான் கூறிய அவ்விடங்களிலாயினும் மற்ற இடங்களிலாயினும் ஆகட்டும், காண் தக - காட்சிக்குப் பொருத்தமாக,

251. முந்து நீ கண்ட உழி – பிரத்தியட்சமாக நீ பார்த்த போது, முகன் அமர்ந்து ஏத்தி – முகமலர்ந்து துதித்து,

252. கை தொழூஉப் பரவி - கைகளைக் குவித்துப் புகழ்ந்து, கால் உற வணங்கி - (முருகன்) திருப்பாதத்தில் நன்றாகத் தண்டனிட்டு,

253. நெடும்பெருஞ்சிமையத்து நீலப்பைஞ்சுனை - நீண்ட பெரிய இமயமலை உச்சியில் நீல நிறமுடைய தருப்பைகள் அடர்ந்த பசுமையான சுனையிலே,

254. ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப - (ஐம்பெரும்பூதங்களின் தலைவர்களாகிய) ஐந்து பேருள் ஒருவனை தீக்கடவுள் உள்ளங்கையிலே வாங்கித்தர,

255. அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ - (கார்த்திகைப் பெண்டிர்) ஆறு பேர்களால் பெறப்பட்ட ஆறு வடிவம் பொருந்திய செல்வனே,

256. ஆல் கெழு கடவுள் புதல்வ - கல்லால மரத்தின் அடியில் விளங்கும் சிவபெருமான் புதல்வனே, மால் வரை - பெரிய மலையாகிய,

மலைமகள் மகனே ! மாற்றோர் கூற்றே !
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ !
இழையணி சிறப்பின் பழையோள் குழவி !
வானோர் வணங்குவில் தானைத் தலைவ !
மாலை மார்ப ! நூலறி புலவ !
செருவில் ஒருவ ! பொருவிறல் மள்ள !
அந்தணர் வெறுக்கை ! அறிந்தோர் சொல்மலை !

---

257. மலை மகள் - இமயமலையரசன் மகளாகிய பார்வதி தேவிக்கு, மகனே - மைந்தனே, மாற்றோர் கூற்றே - பகைவர்க்கு யமனைப் போன்றவனே,

258. வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ - (அடியவர்க்கு) வெற்றியைத் தருபவளும் வெல்லும் போரைச் செய்பவளுமான துர்க்கைக்கு மகனே,

259. இழை அணி சிறப்பின் பழையோள் குழவி - ஆபரணங்களை அணிந்த சிறப்பையுடைய பழையவளாகிய ஆதி பராசக்தியின் குழந்தையே,

260. வணங்குவில் வானோர் தானைத் தலைவ - வளைந்த வில்லைத் தாங்கிய தேவசேனாபதியே,

261. மாலை மார்ப - (கடப்பமலர்) மாலையணிந்த மார்பை உடையவனே, நூலறி புலவ - சாத்திரங்கள் அனைத்தும் அறிந்த அறிஞனே,

262. செருவில் ஒருவ - போர்த்தொழிலில் ஒப்பற்றவனே, பொருவிறல் மள்ள - போர் செய்கின்ற வெற்றி வீரனே,

263. அந்தணர் வெறுக்கை - அந்தணர்க்குச் செல்வமாய் இருப்பவனே, அறிந்தோர் சொல் மலை - (உன்னை) அறிந்தவர்க்குப் புகழ் மலையாய் இருப்பவனே,

மங்கையர் கணவ ! மைந்தர் ஏறே !
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ !
குன்றம் கொன்ற குன்றுக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ !
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே !
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக !
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள !

---

264. மங்கையர் கணவ - (தேவயானையார் வள்ளி நாய்ச்சியாராகிய இரு) பெண்டிர்க்குக் கணவனே, மைந்தர் ஏறே - வீரர்க்குள் தலைவனே,

265. வேல் கெழு தடக்கைச் சால் பெருஞ் செல்வ - வேலாயுதம் பொருந்திய பெரிய கையாலாகிய மிகப்பெரிய வெற்றிச் செல்வத்தை உடையவனே,

266. குன்றம் கொன்ற குன்றுக் கொற்றத்து - (அசுரன் தங்கிய கிரவுஞ்சகிரி என்னும்) மலையை அழித்த குறையாத வெற்றியையுடைய,

267. விண் பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ - தேவருலகையொக்கும் உயர்ந்த மலைகளையுடைய குறிஞ்சி நிலத்திற்கு உரியவனே,

268. பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே - பலரும் புகழும் நல்ல மொழித்திறத்தையுடைய அறிஞர்க்குள் தலைவனே,

269. அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக - பெறுவதற்கு அரிய முறைமையையுடைய பெரும்பொருளாகிய மோட்சத்தையுடைய முருகனே,

270. நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேராள - (மோட்சத்தை) விரும்பினவர்க்கு அதை அனுபவிக்கச் செய்யும் பொருத்தமான புகழை உடையவனே,

**அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய் !
மண்டமர் கடந்தநின் வென்றுடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள் !
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள் !
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி !
போர்மிகு பொருந ! குரிசில் !' எனப்பல
யானறி அளவையின் ஏத்தி ஆனாது,**

---

271. அலந்தோர்க்கு அளிக்கும் - துன்பமுற்றவர்க்குக் கிருபை செய்யும், பொலம் பூண் சேஎய் - பொன்னாபரணங்களை அணிந்த முருகனே.

272. மண்டு அமர் கடந்த நின் வென்று ஆடு அகலத்து - நெருங்கிய போர்களை முடித்த உனது வெற்றியை உடைய மார்பினால்,

273. பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள் - யாசிப்பவரைப் பாதுகாக்கும் பயங்கரம் பொருந்திய நெடிய வேளே,

274. பெரியோர் ஏத்தும் பெரும்பேர் இயவுள் - (தேவரும் முனிவருமாகிய) பெரியவரால் துதிக்கப்படும் பெரிய திருப்பெயரையுடைய கடவுளே,

275. சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி - சூரபதுமன் சுற்றத்தை வேரறுத்த தோள்களின் பெருவலிமையாலே,

276. போர் மிகு பொருந - போரில் சிறந்து தோன்றும் வீரனே, குரிசில் - தலைவனே, எனப் பல - என்று பல வகையாக,

277. யான் அறி அளவையின் ஏத்தி - யான் அறிந்த அளவிலே (உனக்குக் கூறியது போலத்) துதித்து, ஆனாது - குறையாமல்,

'நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனென் ; நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய் !'எனக்
குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்
வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி,
' அளியன் றானே முதுவாய் இரவலன்

---

278. நின் அளந்து அறிதல் - உன்னை அளவிட்டு அறிவது, மன் உயிர்க்கு அருமையின் - உலகத்தில் நிலைத்துள்ள உயிர்களுக்கு இயலாமையினால்,

279. நின் அடி உள்ளி வந்தனென் - உன் திருவடி நினைத்து வந்தேன், நின்னொடு - உன்னுடன்,

280. புரையுநர் இல்லாப் புலமையோய் என - உவமிக்கத்தக்கவர் இல்லாத மெய்ஞ்ஞானியே என்று,

281. குறித்தது மொழியா அளவையில் - நீ சொல்லக் கருதியதைச் சொல்லி முடித்தற்கு முன்னே, குறித்து உடன் - அறிந்து உடனே,

282. வேறு பல் உருவின் - வேறுபட்ட பல வடிவங்களையுடைய, குறும்பல் கூளியர்-சிறிய பல ஏவலாளர்,

283. சாறு அயர் களத்து - விழா நடைபெறுகின்ற இடத்தில், வீறு பெறத் தோன்றி - சிறப்புண்டாகும்படி தோன்றி,

284. அளியன்தானே - இவன் (உனது) இரக்கத்திற்கு உரியவன், முதுவாய் இரவலன் - அறிவு முதிர்ந்த யாசகன்,

வந்தோன் பெரும!நின் வண்புகழ் நயந்'தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந் தெய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி,
'அஞ்சல் ஓம்புமதி ; அறிவல்நின் வர'வென

285-86. பெரும இனியவும் நல்லவும் நனி பல ஏத்தி நின்வண்புகழ் நயந்து வந்தோன் என - பெருமானே, இனிமையானவையும் கேட்பார்க்கு நன்மை பயப்பனவுமாகிய பலவற்றைத் துதித்து உனது ஈகையாலுண்டான புகழை விரும்பி வந்தவன் என்று கூற,

287. தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின் - தெய்வத்தன்மை மிகுந்த வலிமை விளங்கும் வடிவத்தையும்,

288. வான் தோய் நிவப்பின் - வானைத்தொடும் உயர்ச்சியையுமுடைய, தான் வந்து எய்தி - தான் வந்து சேர்ந்து,

289. அணங்கு சால் உயர்நிலை தழீஇ - தெய்வத்தன்மை மிகுந்த அந்த உயர்ந்த நிலையைச் சுருக்கி, பண்டைத்தன் - தனது பழைமையான,

290. மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி - வாசனை வீசுகின்ற தெய்வத்தன்மையையுடைய இளவழகைப் புலப்படுத்தி,

291. அஞ்சல் ஓம்புமதி - பயப்படுவதை விட்டுவிடு, அறிவல் நின் வரவு என - உன் வரவின் காரணத்தை முன்னமே அறிவேன் என்று,

அன்புடன் நன்மொழி அளைஇ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்கும்;அதி பலவுடன்

அருவி :

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரற்
பூவுடை இலங்குசினை புலம்பவேர் கீண்டு

---

292. அன்புடன் நன்மொழி அளைஇ - அன்போடு நல்ல வார்த்தைகளைக் கலந்து பேசி, விளிவின்று - அழிவில்லாமல்,

293. இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து - இருண்ட நிறத்தையுடைய கடல் சூழ்ந்த உலகத்தில்,

294. ஒரு நீ ஆகத் தோன்ற - நீ ஒப்பற்றவனாகும்படி, விழுமிய - சிறந்த,

295. பெறலரும்பரிசில் நல்கும் - பெறுவதற்கு அருமையான பரிசிலாகிய மோட்சத்தை வழங்குவன்; அதி பலவுடன் - மிகப்பலவாய்ச் சேர்ந்து,

296. வேறு பல் துகிலின் நுடங்கி - வெவ்வேறு பல வகைப்பட்ட கொடிகளைப் போல அசைந்து, அகில் சுமந்து - அகில் மரங்களைத் தாங்கி,

297. ஆர முழு முதல் உருட்டி - சந்தன மரத்தை முழுமையும் வேருடன் உருட்டிக்கொண்டு, வேரல் - மூங்கில்களும்,

298. பூவுடை இலங்கு சினை - பூக்களையுடைய அழகிய கிளைகளும், புலம்ப - நடுங்கும்படி, வேர் கீண்டு - வேரைக்கல்லி,

விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கமழ் அலரிறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று

---

299. விண்பொரு நெடு வரை - தேவருலகை அளாவிய நீண்ட மலையில், பரிதியின் தொடுத்த - சூரிய மண்டலம்போலத் (தேனீக்களால்) கட்டி வைக்கப்பட்ட,

300. தண் கமழ் அலர் இறால் சிதைய - குளிர்ச்சியாய் மணம் வீசுகின்ற விரிந்த பெரிய தேன் கூடுகள் அழிய,

301. நன் பல ஆசினி முது சுளை கலாவ - நல்ல பல வேர்ப்பலாப்பழங்களின் முற்றிய சுளைகள் கலக்க, மீமிசை - மிகவும் உயர்ந்த,

302. நாக நறுமலர் உதிர - சுரபுன்னை மரங்களின் மணம் பொருந்திய பூக்கள் சிந்த, ஊகமொடு - கருங்குரங்குகளுடன்,

303. மாமுக முசுக்கலை பனிப்ப - கரிய முகத்தையுடைய ஆண் குரங்குகளும் நடுங்கவும், பூநுதல் - அழகிய புள்ளிகளைக்கொண்ட மத்தகத்தையுடைய,

304. இரும்பிடி - பெரிய பெண் யானை, குளிர்ப்ப வீசி - குளிர்ச்சியடையவும் மோதி, பெருங்களிற்று - பெரிய ஆண் யானையின்,

305. முத்துடை வான்கோடு தழீஇ - முத்துகளையுடைய பெரிய தந்தங்களை வாரிக்கொண்டு, தத்துற்று - குதித்து,

நன்பொன் மணிநிறம் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன

---

306. நன்பொன் மணி நிறம் கிளர - மாற்றுயர்ந்த பொன்னும் இரத்தினங்களும் தம் நிறம் வெளிப்படத் தோன்றும்படி, பொன் கொழியா - பொன் துகளைக் கொழித்து,

307. வாழை முழு முதல் துமிய - வாழையாகிய முழுமரம் துணிந்து விழவும், தாழை - தென்னையின்,

308. இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி - இளநீரை யுடைய சிறந்த குலைகள் உதிரவும் தாக்கி,

309. கறிக்கொடிக் கருந்துணர் சாய - மிளகு கொடிகளின் கரிய கொத்துகள் சாயும்படி, பொறிப்புறம் – புள்ளிகளையுடைய முதுகையும்,

310. மடநடை - தளர் நடையையும் உடைய, மஞ்ஞை பல உடன் வெரீஇ - மயில்கள் பலவும் ஒருங்கே பயந்து,

311. கோழி வயப்பெடை இரிய – காட்டுக் கோழிகளின் வலிய பெடைகளுடன் ஓடவும், கேழலொடு - காட்டுப்பன்றியுடன்,

312. இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன - கரிய பனைமரத்தின் உள்ளீட்டில் பொருந்திய மெல்லிய செறும்பைப் போன்ற,

குருஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேணின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

---

313. குருஉ மயிர் - நிறம் பொருந்திய மயிரமைந்த, யாக்கை - உடம்பையும், குடா அடி - வளைந்த பாதத்தையும் உடைய, உளியம் - கரடிகள்,

314. பெருங்கல் விடர் அளைச் செறிய - பெரிய மலையின் பிளப்பாகிய குகையிலே சேர, கருங்கோட்டு - கரிய கொம்புகளையுடைய,

315. ஆமா நல் ஏறு சிலைப்ப – காட்டுப் பசுக்களின் அழகிய எருதுகள் முக்காரத் தொனி செய்ய, சேண்நின்று – மலையின் உச்சியிலிருந்து,

316. இழுமென இழிதரும் – இழுமென்னும் ஓசையுடன் இறங்கி வரும், அருவி - அருவிகளையுடைய,

317. பழம் உதிர் சோலை மலை கிழவோன் - கனிகள் தாமே உதிர்கின்ற சோலைகளையுடைய மலைக்கு உரியவனை முருகன்.

பிற்சேர்க்கை

நேரிசை வெண்பா

குன்றம் எறிந்தாய்! குரைகடலிற் சூர்தடிந்தாய்!
புன்தலைய பூதப் பொருபடையாய்!—என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே!
உளையாய்என் உள்ளத்து உறை. 1

(பதவுரை) குன்றம் எறிந்தாய் - (கிரவுஞ்சம் என்னும் மலையை அழித்தவனே, குரை கடலில் சூர் தடிந்தாய் -ஒலிக்குஞ் சமுத்திரத்தில் (முழுகி ஒளிந்த) சூரபதுமனைக் கொன்றவனே, புன் தலைய - சிறிய தலையை உடைய, பூதப் பொருபடையாய் - பூதங்களாகிய போர் செய்யும் சைனியத்தை உடையவனே, என்றும் இளையாய் - எந்நாளும் இளைஞனாய் இருப்பவனே, அழகியாய் - அழகை உடையவனே, ஏறு ஊர்ந்தான் - எருதை ஏறிச்செலுத்துபவனான சிவபெருமானுக்கு, ஏறே-ஆண்சிங்கம் போலும் மைந்தனே, என் உள்ளத்து - எனது மனத்தில், உளையாய் - இருப்பவனாய், உறை - தங்குவாயாக.

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

(ப - ரை.) குன்றம் எறிந்ததுவும் - (கிரவுஞ்சம் என்னும்) மலையை அழித்ததும், குன்ற–(அசுரர் வலிமை) குறையும்படி, போர் செய்ததுவும் - சண்டை செய்ததும், அன்று-(தேவர் அசுரரால் துன்பமடைந்த) அக்காலத்தில், அங்கு - அந்தத் தேவர் உலகில், அமரர் - தேவரின், இடர் தீர்த்ததுவும் - துன்பத்தை நீக்கியதும், இன்று - இந்நாளில், என்னை - (அடிமையாகிய) அடியேனை, கை

விடா நின்றதுவும் - கை சோர விடாமல் வந்து காட்சி தந்ததும், கற்பொதும்பில் - (நக்கீரருள்ளிட்ட நூற்று வரை) மலைக்குகையிலே, காத்ததுவும் - (பூதத்திட மிருந்து விடுவித்துப்) பாதுகாத்தருளியதும், மெய் விடா வீரன் - (காப்பேன் என்னும்) உண்மையை விடாத வீரனான முருகப் பெருமானது, கைவேல் - திருக்கரத்தில் அமைந்த வேலாயுதமேயாம்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. 3

(பொழிப்பு) வீரத்தையும், நீட்சியையும், தேவரைச் சிறை நீக்கிய தீரத்தையும், முருகன் திருக்கரத்தில் இருப்பையும், சமுத்திரத்தில் குளித்தலையும், வெற்றியையும், சூரபதுமன் மார்பையும் கிரவுஞ்ச மலையையும் துளைத்தலையும் உடைய வேலாயுதம் எனக்குத் துணையாகும்.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குக்
